SAPTHAGIRI (TAMIL)
SPIRITUAL ILLUSTRATED MONTHLY
Volume:2, Issue: 2, Pages:56
September -2022, Price Rs.20/-

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

செப்டம்பர் 2022,
விலை ரூ.20/-



**27-09-2022**
**செவ்வாய்க்கிழமை**
**துவஜாரோஹணம்**



## திருமலையப்ப ஸ்வாமி

**வருடாந்திர பிரம்மோத்ஸவம்**
**2022 செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 05 வரை**

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஸப்தகிரி இதழுக்கு தாங்கள் அளித்து வரும் ஆதரவு தன்னிகரற்றது!
தி.தி.தேவஸ்தானத்திற்கும் வாசகர்களுக்குமிடையே ஒரு பாலமான"ஸப்த வர்ண"
சமய மாத இதழ் "ஸப்தகிரி"யின் விலையில் மாற்றம்!!

உங்கள் இல்லங்களுக்கே அலர்மேல் மங்கை உறை மார்பன்
மாதாமாதம் எழுந்தருளும் அனுபூதியைப் பெறுங்கள்

ஸப்தகிரி
சமய
மாத இதழுக்கு
சந்தா
செலுத்துங்கள்...



திருமலையப்பனின்
அக்ஷர ப்ரசாதமான
"ஸப்தகிரி"யை
திங்கள்தோறும்
பெற்றிடுங்கள்



# ஸப்தகிரி

## சமய மாத இதழ்

(தெலுங்கு, தமிழ், கன்னடம், ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம்)



.....சந்தா விவரங்கள்.....

தனிப்பிரதி : ரூ.20/-
வருடச் சந்தா: ரூ.240/-
ஆயுள் சந்தா(12 வருடங்கள்) : ரூ.2,400/-
அயல்நாட்டு வருடச்சந்தா : ரூ.1,030/-

இவ்விலைமாற்றம் செப்டம்பர் 2022 முதல் நடைமுறைக்கு வருகின்றது.
இவ்விலை மாற்றம் புதிதாகக்கட்டும் சந்தாதாரர்களுக்கு மட்டுமே பொருந்தும்.

விவரங்களுக்கு :

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தே. அச்சக வளாகம், கே.டி. சாலை, தி.தி.தே. திருப்பதி - 517 507.
தொலைபேசி எண்கள் : 0877-2264363, 2264543



கத$_2$ம் ந ஜ்ஞேயமஸ்மாபி$_4$:
பாபாத$_3$ஸ்மாந்நிவர்திதும் ।
குலக்ஷயக்ருதம் தோ$_3$ஷம்
ப்ரபச்யத்$_3$பி$_4$ர்ஜநார்த$_3$ந ॥

ஜனார்தனா! குலநாசத்தினால் ஏற்படும் குற்றத்தை நன்கு உணர்கின்ற நாம், இந்தப் பாவச் செயலிலிருந்து விலகுவது பற்றி ஏன் ஆலோசிக்காமல் இருக்க வேண்டும்? (ஆலோசிக்கவே வேண்டும்.)

– ஸ்ரீமத் பகவத் கீதை 1–39



அஹம் தூரதஸ்தே பதாம்போஜயுக்ம -
ப்ரணாமேச்சயாகத்ய ஸேவாம் கரோமி ।
ஸக்ருத்ஸேவயா நித்ய ஸேவாபலம் - த்வம்
ப்ரயச்ச ப்ரயச்ச ப்ரபோ வேங்கடேச ॥

பிரபோ! வேங்கடேசா! அடியேன் தேவரீருடைய திருவடித் தாமரைகளை வணங்க வேண்டும் என்ற விருப்பத்தினால் தொலைவிலிருந்து வந்து சேவிக்கிறேன். இந்த ஒரு தடவை சேவிப்பதினால் எப்பொழுதும் வணங்குவதினால் ஏற்படும் பலனைத் தந்தருளுவாயாக!

– ஸ்ரீ வேங்கடேச மங்களாசாசனம்

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## பஞ்சகவ்யத்தால் தயாரிக்கப்பட்ட பொருட்கள்

**ஊர்வி நாசல் ட்ராப்ஸ்**
சளி, தலைவலி தடுக்க, கண், காது & மூக்கின் செயல்பாடுகளை மேம்படுத்த...

**பூமி ஹெர்பல் ஃப்ளோர் க்ளீனர்**
தரையைச் சுத்தப்படுத்தவும், கிருமிகளை அழிக்கவும் மற்றும் இயற்கை நறுமணத்திற்கும்...

**நந்தினி கோ அர்க்**
நீண்ட நாள் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ வழிவகுக்கும்.

**க்ஷமா கௌ டங்க் கேக்ஸ்**
யாகம் மற்றும் ஹோமங்களில் பயன்படுத்தப் படுகிறது.

**பூவட்டி கௌ டங்க் லாக்ஸ்**
யாகம் மற்றும் ஹோமங்களில் பயன் படுத்துவதால் காற்றுத் தூய்மையாகும்.

**அவனி தூப் சூர்ணம்**
நறுமணமாக வரும் வாசனை நம்மை காக்கும்.

**தரணி அகர்பத்தி**
பூமித்தாய் போன்று நன்மை நிறைந்தது.

**தாத்ரி சாம்பராணி கப்ஸ்**
நல்ல ஆரோக்கியத்தை அளிக்கும்.

**வைஷ்ணவி தூப் ஸ்டிக்ஸ்**
காற்றைத் தூய்மைப்படுத்தும்.

**வாராஹி தூப் கோன்ஸ்**
தூயப்புகையானது சுற்றுப்புறச் சூழலை தூய்மைப்படுத்தும்

**பிருத்வி விபூதி**
ஐச்வர்யத்தைப் பெருக்கும்.

**தன்ஷிகா ஹெர்பல் டூத் பவுடர்**
பற்கள் மற்றும் ஈறுகளை காக்கும்.

**ஹிரண்மை ஹெர்பல் ஃபேஸ் பேக்**
அழகையும் நிறத்தையும் காக்கும்.

**மஹி ஹெர்பல் சோப்**
தோலை பாதுகாக்கும்.

**கஸ்யபி ஹெர்பல் ஷாம்பு**
தலைமுடியைப் பாதுகாக்கும்.





வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

## செப்டம்பர் 2022




மலர் 02 இதழ் 02

சிறப்பு ஆசிரியர் :
திரு. A.V. தர்மா ரெட்டி, ஐ.டி.இ.எஸ்.,
செயலாட்சித் தலைவர்(F.A.C.), தி.தி.தே.
வெளியீட்டாளர்-பிரதான ஆசிரியர் :
Dr. K. ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா

பிரதிகளுக்கு:
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை
www.tirumala.orgயில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri.helpdesk@tirumala.org

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.20/- |
| வருடச்சந்தா | ரூ.240/- |
| ஆயுள் சந்தா (12 வருடங்கள்) | ரூ.2,400/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.1,030/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும்
அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை

பக்கம்


**திருமலையப்பனின் பெருமைக்கு அழகா!** 7
-பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.

**வித்தகன் வேங்கடவாணன்** - திரு.எஸ். சுதர்சனம், நங்கைநல்லூர். 13

**கற்கண்டு மலையானின் கனியருள் நாயகி** 17
- திரு. காயார் கோமடம் சேஷாத்ரிதாசன், காஞ்சிபுரம்.

**தலைமுடி காணிக்கை** 21
- திரு. எம். அசோக் ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

**திருவேங்கடம் அடை நெஞ்சே** 24
- திரு. ஆர். கண்ணன், பெங்களூரு.

**அன்னமய்யா போற்றும் ஆனந்த நிலையன்** 31
- திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத்.

**திருவேங்கடவன் திருவருள்** 35
- திரு. எ.கிருஷ்ணன், திருநெல்வேலி.

**ஜீயங்கார் அமைப்பு** - திரு. அத்தி.ரங்கராஜன், திருப்பதி. 36

**பெருமாள் பிரசன்னமான பெருமலை** 40
- நெய்வாசல் நெடுஞ்செழியன், சிதம்பரம்.

**திருவேங்கடவனின் திருவிளையாடல்** 43
- திரு.ரா.முரளிதரன், கடலூர்.

**ராசிப்பலன்கள் : செப்டம்பர் 2022** 45
- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம்.

**சித்திரக்கதை : தூய பக்திக்கான பலன்** 46

**நீதிக்கதைகள் : நம் கடமையே நமக்கு கற்கண்டு** 48
- திருமதி எஸ். வைஷ்ணவி. திருப்பதி.


### வாசகர்களுக்கு...

இவ்விதழ் பிரம்மோத்ஸவ சிறப்பிதழாக வெளிவருவதால் இந்த இதழில் வெளிவர வேண்டிய தொடர் கட்டுரைகள் யாவும் அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். -பிரதான ஆசிரியர்

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : துவஜாரோஹணம், திருமலை.

பின்னட்டை : பெரிய சேஷ வாகனத்தில் உபயதேவியருடன் திருமலையப்ப ஸ்வாமி, திருமலை.







உங்களுடன்...

# திருவேங்கடவனின் திவ்ய தரிசனம்

கலியுகக் கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானை நாள்தோறும் பல்லாயிரம் பக்தர்கள் நேராக திருமலைக்கு வருகை தந்து, எம்பெருமானைக் கண்ணாரக் கண்டு அருள் பெற்று இன்புறுகின்றனர். அந்த திருவேங்கடமுடையானோ தம் பக்தர்களுக்காக மாதம் மாதம் அவர்களின் இல்லங்களைத்தேடிச் சென்று ஸப்தகிரி இதழின் மூலம் காட்சி அளிக்கின்றான். இவ்விதழினை திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரால் 1949 ஆம் ஆண்டு முதன் முதலில் சஞ்சிகையாக வெளியிட்டு வந்து பின்னர் ஸப்தகிரி என்னும் பெயரில் 1970 ஆம் ஆண்டு முதல் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம், கன்னடம், இந்தி, சமஸ்கிருதம் என ஆறு மொழிகளில் பிரசுரிக்கப் பட்டது. அன்று முதல் இன்று வரை ஸப்தகிரி இதழ் திருவேங்கடவன் திருவருள், திருமலை விழாக்கள், ஆழ்வார் ஆசார்ய புருஷர்களின் அருளிச்செயல், திவ்யதேச வைபவங்கள் என எண்ணற்ற ஆன்மீகக் கட்டுரைகளை தாங்கி சுமார் 50 ஆண்டுக்கும் மேலாக பயணித்து வருவது குறிப்பிடத்தக்கது. ஸப்தகிரி இதழ் கடந்த ஆறு வருடங்களாக இதழ் முழுவதும் வண்ணமயமாக வெளிவந்து வாசகர்களின் உள்ளங்களை கொள்ளைக்கொண்டு வருவது யாவரும் அறிந்ததே.

ஸப்தகிரி கடந்த இருபது வருடங்களாக விலையில் மாற்றமின்றி இருந்த நிலையில் தற்பொழுது விலை மாற்றம் கண்டுள்ளது. அச்சிடுவதற்கான மூலப் பொருட்களின் அபரிமிதமான விலை ஏற்றத்தினால் உங்கள் ஸப்தகிரி இதழ் இம்மாதம் (செப்டம்பர்) முதல் இருபது ரூபாய் என விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்தனை வருடங்களாக ஸப்தகிரி இதழுக்கு ஆதரவு தந்த திருவேங்கடவனின் பக்தர்களான வாசகப் பெருமக்கள், தொடர்ந்து அவ்வாதரவினை நல்க வும். தொடர்ந்து ஸப்தகிரி இதழின் மூலம் எம்பெருமானை தரிசிக்க வேண்டுகிறோம்.

இப்பிரம்மாண்டத்தில் திருமலை திவ்ய திருத்தலத்திற்கு இணையான திருத்தலம் இல்லை என்றே கூறலாம். நூற்றுக்கணக்கான புண்ணிய தீர்த்தங்களால், மலைத்தொடர்களால் சூழப்பட்டுள்ள இப்புனிதமான மலையும் எப்பொழுதும் பக்தர்களின் கூட்டத்தால் நிரம்பி வழிகின்றது. இத்தலத்தில் தினமும் திருவிழாக்கள்தான்.

திருமலையில் சுப்ரபாதம் தொடங்கி, ஏகாந்த சேவை வரை நித்யோத்ஸவமும், வாரோத்ஸவமும், பக்ஷ உத்ஸவமும் மாதோத்ஸவமும், வருடாந்திர உற்சவங்கள் என நித்யம் திருவிழாக்களாக நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. இவ்வகையில் வருட உத்ஸவங்களில் ஒன்றான மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவது பிரம்மோத்ஸவம் ஆகும். முதல் நாள் துவஜாரோஹணத்தில் தொடங்கி சக்கர ஸ்நானம் ஈறாக, காலை, மாலை என இரு வேளைகளிலும் திருமலையப்ப ஸ்வாமி திருமாடவீதிகளில் தனித்தும், உபயநாச்சிமார்களுடனும் வெவ்வேறு வாகனங்களில், பல்வேறு அலங்காரங்களில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்து அருள் புரிவார்.

கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு அதாவது இரண்டு வருட காலத்திற்குப் பிறகு திருமலையப்ப ஸ்வாமி இவ்வருடம் பிரம்மோத்ஸவத்தின் போது திருமாட வீதிகளில் எழுந்தருள உள்ளார். பத்து நாட்களும் சிறப்பாக நடைபெறும் ஸப்தகிரி வாசனின் பிரம்மோத்ஸவத்தைக் காண்பதால் ஆனந்த அனுபூதியும், திருவேங்கடவனின் அருளும் முழுமையாகப் பெறலாம். மேலும், ஸப்தகிரி வாசனின் பிரம்மோத் ஸவத் திருக்காட்சி புகைப்படங்களை உங்கள் ஸப்தகிரி இதழ் மூலம் உங்கள் இல்லங்களில் இருந்தபடியும் தரிசிக்கலாம்.

**வாருங்கள் திருமலைக்கு திருமலையப்பனைக் காண!**
**வாங்குங்கள் ஸப்தகிரியை அவன் அருளை பேண!!**





மேகத்தை தூது விடக்காரணம், மேகம் நீல நிறத்தை பிரதிபலிப்பது. நீல நிறம் கொண்டவன் பகவான், நீலமேக சியாமளன் என்று சொல்வார்கள்.

# திருமலையப்பனின் பெருமைக்கு அழகா!

ஆண்டாள் நாச்சியாரின் இரண்டாவது பிரபந்தம் நாச்சியார் திருமொழி. அதில் உள்ள அழகான பாசுரம் இது.

*"விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்!*
*தெண்ணீர் பாய் வேங்கடத்தென் திருமாலும் போந்தானே?*
*கண்ணீர்கள் முலைக்குவட்டில் துளிசோரச் சோர்வேனை*
*பெண்ணீர்மை யீடழிக்கும் இதுதமக்கோர் பெருமையே"*

மேகங்களை ஆண்டாள் தூது விடுகிறாள். ஏன் தூது விடுகிறாள்? பிரிவாற்றாமையால் தூது விடுகிறாள்.

தலைவி, தலைவனைக் குறித்தோ, தலைவன் தலைவியைக் குறித்தோ, தூது விடுவது என்பது மரபு.

தூது காப்பியங்களில் இது முதலாவதாக இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

தலைவியை விட்டுப் பிரிந்த தலைவன், அவளைப் பிரிந்ததனால் ஏற்படும் மன வேதனைகளை, வானத்தில் ஓடுகின்ற மேகத்திடம் சொல்லி, தன்னுடைய ஆற்றாமையை அவளிடம் சேர்த்து விட வேண்டும் என்று அனுப்புகிறான். இந்த விஷயம் தான் மேகசந்தேசம் என்ற காவியம்.



மேகம், அன்னம், கிளி, நாரை, குயில் என்று பலவற்றைத் தூது விடுவதை இலக்கியங்களிலே காணலாம். மகாகவி காளிதாசன் மேகங்களை தூது விடுவதைப் பற்றி "மேகசந்தேசம்" என்ற அற்புதமான காவியத்தை படைத்திருக்கிறார்.



# வராகரான திருவேங்கடவன்

திருவேங்கட திவ்ய தேசம் வராகக்ஷேத்திரமாகையால் ஸ்வாமி புஷ்கரணி கரையில் ஸ்ரீவராக ஸ்வாமி சேவை சாதிக்கின் றார். வராகப் பெருமாளை சேவித்தப் பிறகே திருவேங்கடவனை தரிசிப்பது மரபு. சமுத்திரத்தின் அடியில் பலகாலம் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலமகளாம் பூமா தேவியை வராக அவதாரம் எடுத்து சமுத்திரத்தினுள் மூழ்கி தமது கொம்புகளின் நுனியில் தாங்கி மீட்டு வெளியே கொணர்ந்து அருளியதை பொய்கை ஆழ்வார் திருவேங்கடத்தானிடம் கண்டு அனுபவிக்கிறார்.

இடந்தது பூமி, எடுத்தது குன்றம்
கடந்தது கஞ்சனை முன்னஞ்ச-கிடந்ததுவும்
நீரோத மாகடலே, நின்றதுவும் வேங்கடமே
பேரோத வண்ணர் பெரிது.

இங்கே ஆண்டாள் அதாவது தலைவி தன்னைவிட்டுப் பிரிந்த தலைவனிடம் தன்னுடைய ஆற்றாமையைச் சொல் என்று அழகான தமிழில் தூது விடுகிறாள். மேகத்தைத் தூது விடக் காரணம், மேகம் நீல நிறத்தை பிரதிபலிப்பது. நீல நிறம் கொண்டவன் பகவான். நீலமேக சியாமளன் என்று சொல்வார்கள். கார்மேகம் என்று சொல்லும் வழக்கம் உண்டு.

அடுத்து பகவானுடைய வண்ணங்களையும் எண்ணங்களையும் பிரதிபலிக்கும் எந்தப் பொருளைப் பார்த்தாலும் பகவானாகவே கருதுவது ஆண்டாளின் வழக்கம்.

அதுவொரு மழைக்காலம். ஆண்டாள் வானத்தைப் பார்க்கிறாள். வடதிசையிலிருந்து அதாவது திருமலையிலிருந்து இந்த மேகங்கள் திரண்டு வருவதாக நினைக்கிறாள். தன்னுடைய தலைவன் இருக்கக்கூடிய இடத்திலிருந்து இந்த மேகங்கள் வருவதால், திருமலையப்பன் கூட வருவானோ என்று அவள் நினைக்கிறாள்.

அதை மேகங்களிடம் கேட்கிறாள். "மேகங்களே, உங்களோடு என்னுடைய தலைவனாகிய வேங்கடவனும் வருகிறானா? அவனோடு சேர்ந்து வாழ்ந்தால் தான் என் உயிர் இருக்கும். இதை அவனிடம் சொல்லி எப்படியாவது சேர்ப்பிக்க வேண்டும்'' என்று சொல்வதாக இந்தப் பதிகத்தில் எல்லாப் பாசுரங்களும் அமைந்திருக்கின்றன. அதில் முதல் பாசுரம் தான் இந்தப் பாசுரம். ஆண்டாள் அரங்கனைத்தான் கை பிடித்தாள். ஆனால் அந்த அரங்கன் யார்?

*''மந்தி பாய் வட வேங்கட மாமலை வானவர்கள்*
*சந்தி செய்ய நின்றான் அரங்கத்தரவிணையான்*
*தானே...''*

பரமபதத்தில் இருந்து இறங்கி வந்து திருவரங்கம் அடைவதற்கு முன், திருமலையில் விண்ணுக்கும் மண்ணுக்கும் வைப்பாக நின்றவன்.

இறங்கி வந்த அவனை அடைவது தான் உயிர்களின் இலட்சியம். ஆண்டாள் இலட்சியமும் அதுவாகத்தான் இருக்க முடியும். இன்னிசையால் "திருப்பாவை" எனும் முதல் பிரபந்தத்தைப் பாடுகின்ற பொழுது அவளுடைய நோக்கம் எப்படிப் பட்டதாக இருந்தது என்பதை திருப்பாவை தனியனிலே உய்யக்கொண்டார் சொல்லுகின்றார்.

*''சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே! தொல்பாவை*
*பாடி அருளவல்ல பல் வளையாய்! நாடி நீ*
*வேங்கடவற்கு என்னை விதி என்ற இம் மாற்றம்*
*நாம் கடவா வண்ணமே நல்கு''.*

உய்யக்கொண்டார் ஆண்டாளின் திருவுள்ளக் கருத்தை இத்தனை வெளிப்படுத்தினாலும் ஆண்டாளும் தன்னுடைய கருத்தை அழுத்தமாகப் பதிவிடுகிறாள்.

*''வெய்யதோர் தழல் உமிழ் சக்கரக்கை*
*வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே''*

அவன் பரமபதத்தில் இருந்து இறங்கி வந்து திருமலையில் நின்றது போலவே, இவளும் அங்கே இருந்து வந்தவள் தானே. இதைத்தானே மணவாளமாமுனிகள்

*இன்றோ திருவாடிப்பூரம் எமக்காக*
*வன்றோ இங்கு ஆண்டாள் அவதரித்தாள் - குன்றாத*
*வாழ்வான வைகுந்த வான் போகந் த(ன்)னை இகழ்ந்து*
*ஆழ்வார் திருமகளாராய்*

என்று பாடுகின்றார். எனவே, இந்தக் காதல் இயல்பானது. கொடியானது கோல் தேடி ஓடுவதைப் போல, ஜீவாத்மாவின் தன்மையை உணர்ந்த ஆன்மீக மனம், பரமாத்மாவிடம் சென்று ஐக்கியமாகிட விரும்பும். இதைத்தான் இந்தப்பாசுரத்தில், "என்னை இயக்குகின்ற அந்த பரமாத்மாவிடம் சேர்த்தால் ஒழிய என்னுடைய ஆன்மா மகிழ்ச்சி அடையாது. வாழ்க்கை நிறைவு பெறாது" என்று சொல்கின்றாள்.

*''விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்''* என்கின்ற அந்த முதல் வரியைப் பாருங்கள். அண்ணாந்து பார்த்தால் ஆகாசம் முழுவதும் மேகங்கள் பரந்து இருக்கின்றன. திருமலையிலும் இறைவனை அண்ணாந்து தான் பார்க்க வேண்டும். காரணம் அவன் மலைமேலே இருக்கின்றான். மேலே தான் பார்க்க வேண்டும் அல்லது மேலே சென்று பார்க்க வேண்டும்.

மேகங்கள் ஒரு மேற்கட்டி போல எங்கும் பரந்து இருக்கின்றன. இறைவனுடைய திருவருள் திட்டு திட்டாக இல்லாமல் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும்.

அடுத்த வரியில், *''தெண்ணீர்பாய் திருவேங்கடம்''* என்று தெளிந்த தீர்த்தங்கள் உடைய திருவேங்கடம் என்கிறாள்.

மலையுச்சியிலிருந்து எந்தக் களங்கமும் இல்லாமல் வருவதால், அந்தத் தீர்த்தங்களில் தெளிவு உண்டு. பொதுவாகவே நிலத்தில் அல்லது சம நிலத்தில் ஓடும் தண்ணீரை விட, மலையிலிருந்து விழுகின்ற நீரானது, அதிக சுவையுடனும் தெளிவுடனும் இருக்கும்.

திருமலையில் எத்தனையோ தீர்த்தங்கள் இருக்கின்றன. பாபநாசம் இருக்கிறது. சுவாமி புஷ்கரணி இருக்கிறது. இன்னும் பல தீர்த்தங்கள் உண்டு.

ஆனால், மிகப் பெரிய தீர்த்தம் எது என்று சொன்னால் அந்த பகவான்தான். எம்பெருமானுக்கு தீர்த்தன் என்கின்ற ஒரு திருநாமம் உண்டு. திருவாய்மொழி பாசுரங்களுக்கும் தீர்த்தங்கள் என்று பெயருண்டு.

தீர்த்தங்கள் உடலை தூய்மைப்படுத்தும். தீர்த்தனாகிய பகவான் மன மாசுகளை அகற்றி, தன்னை அறியக்கூடிய தெளிந்த சிந்தனையைத் தருவான். அவன்தான் திருவேங்கட மலையில் எழுந்தருளி இருக்கக்கூடிய இறைவன்.

அடுத்து, *''என் திருமாலும் வந்தானோ''* என்ற வரி. உங்களோடு திருமலை அப்பனாகிய என்னுடைய தலைவனும் வந்தானோ என்று கேட்கிறாள். வேங்கடவன் என்று சொல்லாமல் திருமால் என்ற பதத்தைப்

## கூர்மமான திருவேங்கடவன்





**மந்திர மலை பாற்கடலுள் இறங்கியவுடன் பெருமாள் கூர்மம் என்கிற ஆமை அவதாரம்எடுத்து பாற்கடலில் அம்மலையை தம்முடைய முதுகிலே தாங்கிக்கொண்டதால் அமுதம் வெளிவந்தது. எம்பெருமான் மோகினி அவதாரம் எடுத்து அரக்கர்களை மயங்குரச் செய்து தேவர்கள் அமுதம் பெறுவதற்கு உதவினார். இதனையே ஆண்டாள் வேங்கடவன் திருவடிகளில் விண்ணப்பம் செய்து தம்மோடு ஒரே ஒருநாள் மட்டும் பெருமாள் கலந்து செல்வானாகில் தம்முடைய உயிர் தரித்துருக்கும் என உருகுகிறாள்.**

*சங்கமா கடல்கடைந்தான் தண்முகில்காள்! வேங்கடத்துச்*
*செங்கண்மால் சேவடிக்கீழ் அடிவீழ்ச்சி விண்ணப்பம்*
*கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து ஒருநாள்*
*தங்குமேல் என்னாவி தங்குமென்று உரையீரே.*

திருமலையில்

# நவநீத சேவை



திருமலையில் கடந்த ஆண்டு 2021, ஆகஸ்ட் 30 ஆம் தேதி ஸ்ரீகிருஷ்ணாஷ்டமியை முன்னிட்டு திருப்பதி கோசாலையில் நாட்டு பசுக்களின் வாயிலாகப் பெறப்படும் பாலிலிருந்து பாரம்பரிய முறையில் தயாரிக்கப்பட்ட தயிர் ஸ்வாமி ஆலயத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது. இதுவே “நவநீத சேவை” ஆகும். அன்று இந்நிகழ்ச்சியை தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் மற்றும் பல உயர் அதிகாரிகளுடன், கோலகலமாக ஸ்ரீவாரி சேவகர்களுடன் கோலாட்டம், பஜனை முதலிய நிகழ்ச்சிகளுடன் திருமலையில் தொடங்கினர். தினமும் ஆலயத்திற்கு தேவையான வெண்ணெய் இங்கிருந்து “நவநீத சேவை” வாயிலாக பெறுவது குறிப்பிடத்தக்கது.















போட்டிருப்பதை கவனிக்க வேண்டும். காரணம் அவன் தனியாக இருப்பவன் அல்ல. திருவோடு சேர்ந்து இருக்கிறான். இதை *“அகலகில்லேன் இறையுமென்று அலர் மேல் மங்கை உறைமார்பா”* என்று நம்மாழ்வாரும் சாதித்தருளுகின்றார். அவன் தனியாக வர முடியாது.

தனியாக வந்தால் திருவில்லாத் தேவனாகப் போய் விடுவான். ஆனால் நம்முடைய எண்ணங்களை நிறைவேற்ற வேண்டும் என்று சொன்னால், திருவுள்ள தேவனாகவும், திருவோடு இணைந்த ஸ்ரீ:பதி யாகவும் இருக்க வேண்டும்.

ஆகையினால் அவன் நிச்சயம் தன்னுடைய மார்பிலே திருமகளை எழுந்தருளச் செய்து கொண்டு உங்களோடு வந்தானோ? என்று கேட்கிறாள். மேகங்களை ஆண்டாள் பார்க்கும் பார்வையில் அவளுடைய ஆற்றாமை, எதிர்பார்ப்பு விஞ்சி நிற்பதை நாம் மிக எளிதாக முதல் இரண்டு வரிகளில் உணர்ந்து கொள்ள முடியும்.

தலைவனைப் பிரிந்த தலைவி அவனை எதிர் நோக்கி வாசலில் வழி மீது விழி வைத்து காத்திருக்கும் பொழுது அவரோடு சென்றவர்கள், ஒவ்வொருவராக வருகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

அப்பொழுது அவளுடைய பார்வை தூரத்திலும் அருகிலும் மாறி மாறி இருக்கும். ஓ... இவன் அல்ல... அதோ தூரத்தில் ஒருவர் வருகிறார். அவர் தன்னுடைய தலைவராக இருப்பாரோ என்று எதிர் பார்ப்பாள். அதைப்போல மேகங்களைப் பார்க்கின்ற பொழுது, இத்தனை மேகங்கள் வருகின்றனவே, இவைகளோடுதானே என் தலைவனாகிய வேங்கடவனும் இருந்தான். ஒருவேளை பின்னால் வருகின்றானோ? என்று ஆவலோடு பார்க்கின்ற பார்வை

தெரியும். மேகங்களைப் பார்க்கும்பொழுது அவன் வருவானோ என்கின்ற எதிர்பார்ப்பு, அவன் வரவில்லை என்றவுடன் சோர்ந்துபோன ஆற்றாமை, இது இரண்டும் கலந்த ஒரு உணர்ச்சிப் பிரவாகத்தின் வெளிப்பாடு தான் இந்தப் பாசுரம். இதனை ஆண்டாள் மேகங்களிடம் கேட்க, அவைகள் எந்த மறு மொழியும் சொல்லவில்லை. "இல்லை அம்மா, உன்னு டைய தலைவன் பின்னால் வருகின்றான். கொஞ்சம் பொறுத்துக்கொள்" என்று ஒரு தகவல் சொன்னாலும் ஒரு நம்பிக்கை இருக்கும்.

ஆனால், எதுவும் பதில் சொல்லாமல் போய் விட்டால் சந்தேகம் வந்து விடும். மேகங்கள் பதில் சொல்லாததால், அவளுடைய நிலைமை மோசமா கிறது. பதற்றம் அதிகமாகிறது. கண்களில் கண்ணீர் அருவியாக வழிந்தோடுகிறது. இப்பொழுது அவள் உடைந்த குரலில் கேட்கிறாள்.

"மேகங்களே, இப்படி நான் கண்ணீர் விட்டு கதறுகின்றேன். என்னை இப்படிப் பரிதவிக்கும்படி அவன் கை விட்டது அவனுடைய பெருமைக்குரிய விஷயமா? ***''பெண்ணீர்மை ஈடு அழிக்கும் இது''*** என்கின்ற வார்த்தை அற்புதமானது. ஒருமனைவி வாய் திறந்து ஒன்று கேட்டு கணவன் செய்வது கூடாது. அவளுடைய மனம் உணர்ந்து அவன் நடந்து கொள்ள வேண்டும். ஆனால், இப்பொழுது அவன் அப்படி நடந்து கொள்ளவில்லை. இது குறித்து ஒரு பெண், மற்றவர்களிடம் சொல்லக் கூடாது. விசாரிக்கக் கூடாது. இது பெண்களுக்கே உரிய தன்மையானது. ஆனால், அவனுடைய பிரிவைத் தாங்க முடியாமல் தவிக்கும் பொழுது, தன் பெண்ணீர்மை மறந்து, மேகங்களிடம் "இப்படி என் தலைவன் செய்வது சரியா?" என்று பதற்றத்தோடு கேட்கிறாள். கேட்க வைத்து விட்டான் என்பது தான் பெண்ணீர்மை ஈடு அழிக்கும் செயல். இப்படி என் பெண்மையின் சிறப்புத் தன்மையை மீற விட்டது ஒரு பெருமையா என்று கேட்கிறாள்.

திருமால் என்ற வார்த்தையைச் சொல்லும் பொழுது, பெரிய பிராட்டியாரை அணைத்துக் கொண்டு, அவளை எப்படி மகிழ்வித்து கொண்டிருக் கிறானோ, அதைப்போல, அவனையே நம்பி இருக் கும் என்னையும் அவன் மகிழ்விப்பது தான் பெருமை ஆகுமே தவிர, இப்படி முகம் கொடுக்காமல் நோவு படுத்துவது அவனுடைய பெருமைக்கு அழகல்ல. அது அவனுக்கு ஒரு பழியாகவே தலைகட்டும். ஆண்டாள் பெரியாழ்வாரின் திருமகளாய், அஞ்சு குடிக்கு ஒரு சந்ததியாய், ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சி நிற்பவளாய், வைகுந்தம் விட்டு இங்கே அவனை அடைய அவதரித்தவள். "மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழ கில்லேன்" என்ற வைராக் கியம் உடையவள். கண்ணனைத் தவிர வேறு ஒரு வரை அறியாதவள். அந்த கண்ணனாகிய வேங்கட முடையானை அடைய ஆசைப்படும் இவளை ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னால், ஆண்டாளின் பெருமைக்கு எந்தக் குறையும் அல்ல. அவனை நம்பியவளை விட்டு விட்டான் என்கின்ற வார்த்தை, தலைவனுக்கு பெருமை அல்ல என்பதுதான் அவள் ஆதங்கம். அவளுடைய ஏக்கத்தின் உச்சத்தைத் தொடும் வார்த்தைகள் தான்,

***''கண்ணீர்கள் முலைக்குவட்டில்***
***துளிசோரச் சோர்வேனை பெண்ணீர்மை***
***யீடழிக்கும் இதுதமக்கோர் பெருமையே''***

என்ற வரிகள். பாசுரத்தை ஒரு தரம் நிதானமாகப் படியுங்கள். ஆண்டாளின் பரிதவிப்பு, விண் முழுதும் மேகம் விரிந்தது போல் நம் மனம் முழுதும் விரியும்.

***-பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.***

## கோயில் ஆழ்வார் திருமஞ்சனம்



**திருமலையில் வருடத்திற்கு நான்கு முறை கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சி யில் கோயிலை நன்றாக தூய்மைப்படுத்துவது முக்கிய நிகழ்வாக நடைபெறுகின்றன. வைகுண்ட ஏகாதசி, யுகாதி (தெலுங்கு வருட பிறப்பு), ஆனிவர ஆஸ்தானம், பிரம்மோத்ஸவத்திற்கு முந்தைய செவ்வாய்க்கிழமையன்று நடைபெறும். அன்று ஆலயத்தில் அனைத்து இடங்களும், பொருட்களும் தூய்மைப்படுத்தப்பட்டு, நறுமணப்பொருட்களால் தயாரித்த கலவையைப் பூசுவது வழக்கம்.**

# வினைகள் தீர்க்கும் திருப்பதி ஏழுமலை அகர வரிசை அகவல்

-திரு. அருண் ஏழுமலை,
திருத்தணி. 7200149281

அன்னபூரணி அருள் நிறைந்த மலை
ஆனந்தம் நிறைந்த அழகன் மலை
இயற்கை வளம் நிறைந்த ஏழுமலை
ஈசன் அருள் பெற்ற மலை

உலகெலாம் உயர்ந்து ஓங்கும் மலை
ஊண் உணவுகள் தவிர்க்கும் மலை
என்றும் செல்வ வளம் குறையாத மலை
ஏழு உலகமும் போற்றி வாழ் திருமலை

ஐயங்கள் தீர்க்கும் ஐய்யன் மலை
ஒற்றுமையின் உயர்வை காக்கும் மலை
ஓம் என்ற பிரணவ ஒலி ஒலிக்கும் மலை
ஔஷத மூலிகைகள் நிறைந்த மலை

ஃதே நமது வாழ்வு உயர்த்தும் மலை
கற்பூர ஜோதி நிறைந்த மலை
கான ஒலி ஒலிக்கும் கோவிந்த மலை
கிருபை நிறைந்த தேவன் மலை


கீர்த்தனைகள் ஒலிக்கும் வேங்கட மலை
குன்றுகள் உயர்ந்துள்ள ஸப்தகிரி மலை
கூத்தர்கள் சூழ்ந்த குடகு மலை
கெட்டவரையும் நல்லோராய் உயர்த்தும் மலை

கேசவன் புகழ் பாடும் கீர்த்தி மலை
கைடப அரக்கனை காய்ந்த மலை

கொள்கையும் குணமும் நிறைந்த மலை
கோவிந்த நாமம் ஓங்கி ஒலிக்கும் மலை

கௌரியின் அருள் நிறைந்த மலை
தேவாதி தேவரும் தொழும் ஸப்த மலை
தேனருவிகள் பாயும் தீர்த்த மலை
திருமலையே எங்கள் தேவன் மலை.





# வித்தகன் வேங்கடவாணன்



"வித்தகன்" என்றால் விசித்திரமான சக்தி உள்ளவன். மாயன், மாமாயன், ஆச்சர்யப்படத்தக்க பராக்ரமம் உடையவன், அற்புதன், வியக்கத்தக்க செயல்களைச் செய்பவன் என்றெல்லாம் பொருள். வேங்கடம் – வேம்+கடம், வேம் என்றால் பாபங்கள். கடம் என்றால் அழிந்து போவது. "போய பிழையும் புகு தருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்'' என்று ஆண்டாள் நாச்சியார் பாடுகிறாள். ''வித்தகன் வேங்கடநாதன்'' என்று திருநாம சங்கீர்த்தனம் செய்தால், பாபங்கள் எரிந்து சாம்பலாகும் என்று ஆண்டாள் உபதேசம் செய்கிறாள்.

''வேங்கட வாணன்'' என்றால் கலியுகத்தில் பூலோக வைகுந்தனாக திருவேங்கடம் என்னும் திவ்ய தேசத்தில் நித்ய வாசம் செய்பவன், நன்கு இன்பமாக வாழ்பவன் திருவேங்கடவன் பரிபூர்ணன் – பிரான் – முழு முதற் கடவுள் – பரம் பொருள் என்று பொருள் கொள்ளலாம். துவாபர யுகத்தில் ஸ்ரீகிருஷ்ண அவதாரம். ஸ்ரீகிருஷ்ணனே தற்போது கலியுகத்தில் அர்ச்சா அவதார மூர்த்தியாய் திருவேங்கடநாதன், ஸ்ரீநிவாசன், ஏழுமலையான், கோவிந்தன் என்னும் திருநாமங்களோடு, திருமலையில் ஸ்ரீவராஹ க்ஷேத்திரத்தில் எழுந்தருளி இருக்கிறான்.



பிள்ளைத் தமிழுக்கு புத்துணர்ச்சி கொடுத்தவர் பெரியாழ்வார். தாய்மை பெற்று யசோதையாய் மாறி, குழந்தை கண்ணபிரானைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுப் பாடும் அழகே அழகு. குழந்தை கண்ணன் தவழ்ந்து புழுதியில் விளையாடுகின்றான். நிலாவை அழைக்கின்றான்.

மழலை இன்பம் அநுபவிக்கிறார். நிலவே! எல்லாத் திசைகளிலும் சூழ்ந்து எங்கும் ஒளி பரந்து கிடந்து பேரொளி மண்டலமாக நீ இருந்தாலும் என் மகன் (குழந்தை கண்ணன்) திருமுகத்திற்கு நிகராவாயோ? அந்தக் கண்ணனே வியக்கத்தகு சேஷ்டிதங்களைச் செய்வதில் வல்லவனான ''வித்தகன் வேங்கடவாணன்''. அவன் உன்னை அழைக்கின்றான். விரைவாக ஓடிவா என்று பாடுகிறார். இதோ பாசுரம் (பெரியாழ்வார் திருமொழி 1.5.3),

– திரு. எஸ். சுதர்சனம், நங்கைநல்லூர்,
9962788065



*''வித்தகன் வேங்கடவாணன் உன்னை விளிக்கின்ற*
*கைத்தலம் நோவாமே அம்புலீ! கடி தோடிவா''*

திருமலையில் பிரம்மோத்ஸவம். வியக்கத் தகுந்த அற்புதமான செயல்களைச் செய்யும் கலியுகக் கண் கண்ட தெய்வம் *''வித்தகன் வேங்கடவாணன்''* நம்மை பிரம்மோத்ஸவத்திற்கு அழைப்பது போலத் தோன்றுகிறது. *''கடி தோடிவா''* விரைவில் வந்து என் வடிவழகைப் பார். என் திருக்கல்யாண குணங்கள் அடங்கிய நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் காதில் கேட்டு இன்புறு என்று பகவானே அழைப்பது போலத் தோன்றுகிறது. இரவும் பகலும் ஏழுலகும் இத்திருவேங்கடமுடையானின் திருவடிகளைப் பற்றி அல்லவோ – துயரறு சுடரடிகளைப் பற்றியல்லவோ சர்வ சம்பத்தையும் பெறுகின்றன. இருவினையும் கடியும் வித்தகன் வேங்கட வாணனைத் தொழுது எழுவோம் வாரீர்!

''வேம்'' என்றால் அழிவின்மை என்றும், ''கடம்'' என்றால் ஐச்வர்யம் என்றும் சிலர் பொருள் கூறுவர். தன்னை அடைந்தவர்களுக்கு, அழிவற்ற ஐச்வர்யங்களைத் தருபவனாதலால் *''வித்தகன் வேங்கடவாணன்''.* ஆண்டாள் பிரார்த்திப்பதும் அதுவே, *''செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறு''.* *''நீங்காத செல்வம் நிறைந்து வாழ''* வும் வித்தகன் வேங்கடவாணனை வேண்டுகிறாள் நாச்சியார் திருமொழி (1.3). கொத்துக் கொத்தாக மலர்ந்த புஷ்பங்களைத் தொடுத்துக் கொண்டு, கோவிந்த நாமத்தை நெஞ்சில் தரித்துக் கொண்டு, அற்புதமான ஆச்சர்யமான செயல்களைச் செய்யும்'' வித்தகன் வேங்கடவாணன்'' என்னும் பரஞ்சோதிக்குள் புகும்படிச் செய்ய வேண்டும் என்று பிரார்த்தனை.

*''கொத்தலர் பூங்கணை தொடுத்துக் கொண்டு*
*கோவிந்தன் என்பதோர் பேரெழுதி*
*வித்தகன் வேங்கடவாணன் என்னும்*
*விளக்கினிற் புக என்னை விதிக்கிற்றியே''*

பாமர மக்கள் விரும்பி அழைப்பது கோவிந்தா! கோவிந்தா! என்று. அவன் கண்ணன் ஆகையால் கோவிந்தனாகிறான். இந்திரன் கோவிந்த பட்டாபிஷேகம் செய்து கண்ணன் அல்லால் தெய்வம் இல்லை, கண்ணனே உயர்வற உயர்ந்தவன் – பரம் பொருள் – முழு முதற் கடவுள் என்று உலகுக்கு உணர்த்தினான். விளக்கு என்றால் பரஞ்சோதி.

''துயரறு சுடரடி'' திருவாய்மொழியின் முதல் பாசுரத்திலேயே பகவானின் திருவடிகள் சுடர் விட்டு ஒளிக்கக் கூடியதும், நம் துயரறுப்பதும் என்று உபதேசம் செய்கிறார்.

திரு ஆயர்பாடியில் கோவர்த்தன பூஜை, கோலாகலமாக நிறைவேறியது. வழக்கம்போல் இந்திரனுக்கு மரியாதையில்லை. பரம்பொருள் ஸ்ரீமந் நாராயணனுக்கே மரியாதை. இந்திரனுக்கோ அவமானம். கடும் கோபம். தேவதேவன், தேவேந்திரன் ஆயிற்றே. வருணனை அழைத்தான். ''ஸம்வர்த்தகம்'' என்னும் மேகக் கூட்டங்களைக் கூட்டி பிருந்தாவனத்தில் நாசகார மழை– பிரளய மழையை உண்டாக்கினான். கோகுலம், பிருந்தாவனம், விரஜ நகரம் முழுவதும் ஒரே வெள்ளம். கடும் மழை. கொடு மழை. கல் மழை, தீ மழை, கண்ணன் கோவர்த்தன மலையைக்



குடையாக மாற்றி இடது கை சுண்டு விரலின் நுனியால் ஏந்திப் பிடித்தான். ஏழு நாட்கள் தாங்கிப் பிடித்தான். நம்மாழ்வார் இந்த சூழ்நிலையைப் படம் பிடித்து நம் கண் முன் நிறுத்துகிறார் (7.4.10 திருவாய் மொழி),

*"மேய் நிரை கீழ்புக மா புரள, சுனை*
*வாய் நிறை நீர் பிளறிச் சொரிய, இன*
*ஆநிரைபாடி அங்கேயொடுங்க, அப்பன்*
*தீமழை காத்துக் குன்ற மெடுத்தானே"*

வித்தகன் கண்ணன், மாமாயன் கண்ணன் ஏழு நாட்கள் நின்ற இடத்தை விட்டுச் சற்றும் அசையாமல், ஆயர்பாடி மக்களையும் பசுக்களையும் மற்ற கறவைகளையும் காப்பாற்றினான். பகவான் மேனியில் ஒரு சிறு வாட்டமும் மாற்றமும் இல்லை. *"குன்று குடையாய் எடுத்தாய் குணம் போற்றி"* என்று ஆண்டாள் மங்களாசாசனம் செய்கிறாள்.

கோவர்த்தன மலைக்கு ஒரு வருத்தமாம். ஐயோ! குழந்தை நம்மை ஏழு நாள் தூக்கிப் பிடித்ததே! பிராயச் சித்தம் செய்ய நினைத்ததாம். ஏழு பர்வதங்களாக மாறி அதே மலைத் தற்போது கலியுகத்தில் *''வித்தகன் வேங்கடவாணன்''* திருவேங்கடமுடையானைத் தாங்கி நிற்கிறது.



1) ஆதிசேஷன் உருவத்தில் இருப்பதால் "சேஷாசலம்", 2) திருமலையில் வேதங்கள் வாழ்வதால் "வேதாசலம்", 3) பூலோகத்திற்கு கருடனால் கொண்டு வரப்பட்டதால் "கருடாசலம்", 4)விருஷன் என்னும் ராக்ஷஸன் திருமலையில்

## ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷண சாலை, திருப்பதி

**பசுவைக் காப்போம்! நலம் பெறுவோம்!!**



**தி.தி.தே. பசுக்களை பாதுகாப்பதற்காக "ஸ்ரீவேங்கடேஸ்வரா கோ சம்ரக்ஷணா அறக்கட்டளை" நிறுவி, பக்தர்களும் நன்கொடைகளை வழங்குவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தினர். நன்கொடை ரூ.1,000/- குறையாமல் செயலாட்சித் தலைவர், எஸ்.வி.ஜி.எஸ்.டி., தி.தி.தே. திருப்பதி எனும் பெயரில் வங்கி வரைவோலையை எடுத்து, இயக்குனர், ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷணா டிரஸ்ட், ஸ்ரீவேங்கடேஸ்வரா கோசம்ரக்ஷண சாலை, தி.தி.தே. எஸ்.வி.யூ. அஞ்சல், திருப்பதி - 517 502 எனும் முகவரிக்கு அனுப்பவும். ஸ்ரீவேங்கடேஸ்வரா கோ சம்ரக்ஷணா அறக்கட்டளைக்கு வழங்கும் நன் கொடைகளுக்கு, வருமான வரி சட்டம் 1961-ன்படி 80 ஜி. (5)ன்கீழ் வருமான வரி விலக்கும் உண்டு.**

மோக்ஷம் பெற்றதால் "விருஷாத்ரி", 5) அஞ்சனா தேவி தவம் செய்து ஹனுமனைப் பெற்றதால் "அஞ்சனாத்ரி", 6) ஆதிசேஷன் – வாயுபகவான் இருவரும், தங்கள் வலிமையை – பலத்தை பரீக்ஷித்துக் கொண்டதால் "ஆனந்த கிரி", 7) நம் பாபங்களை இக்கலியுகத்தில் போக்கடிப்பதால் "வேங்கடாத்ரி" – வேங்கடாசலம்.

ஏழு பர்வதங்களும் வித்தகன் வேங்கடவாணனைத் தாங்கி நிற்பதால், திருமங்கையாழ்வார் "திருவேங்கடம் அடை நெஞ்சமே" (பெரிய திருமொழி 1.8) பத்து பாசுரங்கள் இயற்றி, நம்மை எட்டெழுத்துத் திருமந்திரம் ஜபித்துக் கொண்டே, வித்தகன் வேங்கடவாணனின் துயரறு சுடரடி தொழுது எழ அழைக்கிறார். உன்னை வந்தடைந்தேன், ***''அடியேனை ஆட்கொண்டருளே''*** (பெரிய திருமொழி 1.9) என்று பிரார்த்தனை செய்யவும் கற்றுக் கொடுக்கிறார்.

***''ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்''*** என்று உபதேசம் செய்கிறார் நம்மாழ்வார் (திருவாய் மொழி 3.3). ***''புகலொன்றில்லா அடியேன் உன்னடிக் கீழ் அமர்ந்து புகுந்தேனே''*** அவன் திருவடிகளைப் பிடித்துக் கொண்டு நற்கதி அடையவும் நம்மை அழைக்கின்றார்.

***"ஆடுதாமரையோறும் ஈசனும் அமரர் கோலும் நின்றேத்தும்''*** வித்தகன் வேங்கடவாணன். அவர்களோடு சேர்ந்து நாமும் வித்தகன் வேங்கட வாணனைத் தொழுது எழுவோம். வாரீர்.








## பஞ்சகவ்ய தயாரிப்புகள், அகர்பத்திகள், ஸ்வாமி சித்திரப்படங்கள்

வேத கலாச்சாரத்தில் பசுவிற்கென்று தனிச்சிறப்புண்டு. பசு மானிடர்களுக்கு அளிக்கும் சாணம், கோமியம், பால், நெய், தயிர் முதலானவை விலை மதிப்பற்ற பஞ்ச கவ்யங்களாகச் சிறப்புப் பெற்றுள்ளன. இப்பஞ்ச கவ்யத்தின் வாயிலாக தி.தி.தே. பல வகையான ஆயுர்வேதப் பொருட்களை உற்பத்தி செய்கின்றது. **தூபம், தன்சிகா பற்பொடி, ப்ருத்வி – விபூதி, இரண்மயி, மஹி, கச்யபி, உர்விநாஜல் – ட்ராப்ஸ், நந்தினி – கோஅர்க, பூமி – மூலிகை தரை கிளினர், க்ஷம – வறட்டை , புவதி காடங்க்லாக்ஸ் மற்றும் அகர்பத்திகள், புனிதமான உலர் மலர்களால் தயாரிக்கப்பட்ட ஸ்வாமி சித்திரப்படங்கள்** போன்ற பொருட்கள் தி.தி.தே. தயாரித்து விற்பனையும் செய்து வருகின்றது. இப்பொருட்கள் கீழ்கண்ட இடங்களில் விற்பனைக்கு தயாராக உள்ளது. **திருமலையில்** ஸ்ரீவாரி லட்டு கௌண்டர் வளாகம், ஸ்ரீவாரி ஆலயம் எதிரில், லேபாக்ஷி எம்போரியம் எதிரில், அன்னப்பிரசாதக்கூடம், **திருப்பதியில்** தி.தி.தே. நிர்வாகக் கட்டிடம் எதிரில், கே.டி. சாலை, ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலய வளாகம், தியான மந்திரம் (ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி தேர் வீதி), ஸ்ரீகோவிந்த ராஜ ஸ்வாமி ஆலய வளாகம், ஸ்ரீநிவாசம் கட்டிடத் தொகுதி, விஷ்னு நிவாசம் கட்டிடத் தொகுதி, ஸ்ரீகோதண்ட ராம ஸ்வாமி ஆலய வளாகம், திருப்பதி இரயில் நிலையம் (கிழக்கு), **திருச்சானூரில்** ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலய வளாகம், **ஸ்ரீநிவாச மங்காபுரம்** ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலய வளாகம்.

கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் ஆகிய யுகங்களின் வரிசையில் நான்காவதாக வருகின்ற கலியுகத்தில் தர்மம் குறைந்து அதர்மம் தலைதூக்கும் என்று கூறுவர்.

*"கலௌ வேங்கட நாயக:"* என்று பெரியோர்கள் கூறுகின்றபடி, இவ்வுலக மாந்தர்களைத் தீவினையில் ஆழ்த்தத் துடித்துக் கொண்டிருக்கும் இந்த கலியுகத்தில், நம்மையெல்லாம் காத்து ரக்ஷிப்பவனாகத் திகழ்கிறான் நம் திருவேங்கடமுடையான்.

அவ்வாறு அவன் நம்மைக் காத்தருளுவதற்குக் காரணம் அவனுடைய கருணை என்னும் பெருங்குணமே என்பது நம் முன்னோர்களின் முடிவான கருத்தாகும்.

இவ்வுலக மாந்தர்களின் பிழைகள் அனைத்தையும் பொறுத்துக் கொண்டு, சகலவித கல்யாண குணங்களும் பொருந்திய தன்னுடைய திவ்ய ஸ்வரூபத்தை தரிசனமாக அளித்து, நல்வழிப் படுத்தி, மோட்சத்தையும் வழங்குகின்ற நம் திருவேங்கடமுடையானின் எல்லையற்ற கருணைக்கு நாமெல்லாம் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

ஸ்ரீராமாநுஜருக்குப் பின்னர் அவதரித்த முக்கியமான ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியர்களில் ஒருவரான ஸ்ரீவேதாந்த தேசிகர், எம்பெருமான் திருவேங்கடமுடையானின் அந்தப் பெருங் கருணையையே பிராட்டியாக உருவகப் படுத்தி "தயாதேவி" என்று அழைத்துப் போற்றியுள்ளர்.

திருவேங்கடமுடையான் சந்நிதியில் ஒலிக்கும் திருமணியின் அம்சமாக, காஞ்சிபுரம் நகரில் தூப்புல் என்ற திவ்யதேசத்தில் அவதரித்த ஸ்ரீவேதாந்த தேசிகர், திருவேங்கடமுடையானின் கருணைத் திறத்தினைப் போற்றி "தயாசதகம்" என்ற அற்புதமான சமஸ்கிருத ஸ்தோத்திரத்தை இயற்றி அருளியுள்ளார்.





# இயற்கையைக்காத்திடுவோம்!

**"திருமலையில் ஏதேனுமாவேனே!..." என்று பாசுரமிட்டார் குலசேகர ஆழ்வார். திருமலை எழில் மிகு மரங்கள் நிறைந்து பசுமையாய், வெண்ணிற வண்ணத்தில் புண்ணிய தீர்த்தங்களான அருவிகளின் ஓசைகள் நிறைந்து, அரிய வன உயிரினங்களின் வாழ்விடமாகத் திகழ்கிறது. அத்தகைய எழில் மிகு நிறைந்த திருமலையைப் பாதுகாக்கும் பொறுப்பும் நம்மிடம் உள்ளது. நாம் உபயோகித்த பொருட்களை புனிதமான திருமலையில் ஆங்காங்கே வீசி எறிவதனால் இயற்கை வளமும், நீர் வளமும் மாசடைகின்றது. இதனால் மழைக் காலங்களில் மலைச்சரிவு போன்ற இயற்கைப் பேரிடர்கள் நிகழ்கின்றன. அடர்ந்த வனப்பகுதியான இத்திருமலையையே வாழ்விடமாகக் கொண்ட அனேக உயிரினங்கள் அழிந்து விடும் அபாயம் உள்ளது. எனவே, நாம் புனிதமான இந்த சேஷாசல வனப்பகுதியை பாதுகாத்து, திருமலையானை தரிசனம் செய்து நம்முடைய சந்ததியினருக்கும் அந்த பெரும் பாக்கியத்தை நாம் அளித்திட வேண்டும்.**

ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி, ஸ்ரீஆண்டாள், ஸ்ரீபத்மாவதிதாயார் என்று எம்பெருமான் திருவேங்கடமுடையானுக்கு ஏற்கெனவே தேவிமார்கள் இருக்கும்பொழுது, அவ்வெம் பெருமானின் எல்லையற்ற கருணையின் திரண்ட வடிவத்தை (தயா–கருணை) தயாதேவி என்று திருப்பெயரிட்டு அவனுடைய இன்னொரு தேவியாக எழுந்தருளச் செய்து, அந்தக் கருணை வடிவமான தயாதேவியின் புகழைப் பலவிதமாகப் போற்று கின்றார் ஸ்ரீவேதாந்த தேசிகர்.

பலச்சுருதி உட்பட நூற்றெட்டு சுலோகங்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ள தயாசதகத்தி லுள்ள ஒவ்வொரு சுலோகமும் பொருள் பொதிந்தது. ஓதுவார் மனதை உயர்த்தி வைப்பது. இவற்றுக்குள் ஒருசிலவற்றின் சிறப்பை இயன்றவரையில் இங்கே அனுபவிப்போம்.

"எம்பெருமான் திருவேங்கடமுடையானின் கருணை எனப்படும் கரும்புச்சாறு பெருமளவில் ஊற்றாகப் பெருகி அது ஒரு பெரிய மலையளவு உள்ள சர்க்கரைக் கட்டி போன்று இறுகி விட்டது. இறுகிய அந்தக் கற்கண்டு மலையே திருமலையாக விளங்குகின்றது" என்று தயாசதகத்தின் முதல் சுலோகத்திலேயே தமது அபாரமான கற்பனைத் திறமையை வெளிப்படுத்துகின்றார்.

ஞானம், பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி, தேஜஸ் (ஒளி) ஆகிய ஆறு பெருங்குணங்களுக்கு பகங்கள் என்று பெயர். இந்த பகங்கள் அனைத் தையும் தன்னிடத்தே கொண்டிருப்பதால்தான் எம்பெருமானுக்கு பகவான் என்ற பெயர் ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் எம்பெருமானின் நாயகியாகிய தயாதேவியாகிய அந்தப் பெருந்தாயின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு தன் பக்தர்களை காக்க வேண்டிய கடமை திருவேங்கடமுடையானுக்குத் தவிர்க்க முடியாததாகிறது.

இன்னொரு சுலோகத்தில்...

"தயாதேவியே! ஒரு தாய், நோய்வாய்ப்பட்ட தன்னுடைய குழந்தைக்கு மலைகளில் விளையும்



புண்ணிய திருத்தலமாம் திருமலையின் தூய்மைக்காக ஒவ்வொருவரும் தம் பங்கு முயற்சி கொள்ளல் வேண்டும். இதனை கருத்தில் கொண்டே திருமலை திருப்பதி தேவஸ்தானமும் திருமலையில் பிளாஸ்டிக் (பிளாஸ் டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் பை களுக்கு) பொருட்களுக்கு நிரந்திர தடை விதித்துள்ளது. எனவே, பக்தர்களும் திருமலை யிலும், இரு மலைவழிச் சாலைகளிலும் அலிபிரி, ஸ்ரீவாரி மெட்டு நடைபாதைகளிலும் பிளாஸ்டிக் பொருட்களை எறியாதீர்கள். துணிப்பைகளையும், பிளாஷ்டிக் அல்லாத குடிநீர் பாட்டில்களையும் பயன்படுத்துங்கள். திருமலையில் தி.தி.தே. வழுங் கும் ஜலபிரசாதத்தை உபயோகியுங்கள். திருமலை யின் சுற்றுபுறத்தையும், சுகாதாரத்தையும் காப்ப தோடு நீர் வளத்தையும் நில வளத்தையும் காப்பதும் நம் கடைமையாகும்.

## திருமலையில் பிளாஸ்டிக் தடை



பச்சிலைகளைக் கொண்டு வைத்தியம் செய்து காப்பாற்றுகின்றாள். உன்னுடைய குழந்தையாகிய நானோ பாவங்களைச் செய்வதாகிய நோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறேன். இதோ இந்தத் திருமலை யில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஸ்ரீநிவாசனோ பிறவி நோய்க்கு மருந்தாக வந்து வாய்த்திருக்கிறான். இந்நிலையில், தயாதேவியாகிய நீ அந்த மருத்துவனைக் கொண்டு என்னுடைய சம்ஸார நோயைத் தீர்த்தருள்வாயாக!" என்று வேண்டுகின்றார்.

தயாசதகத்தின் இருபதாவது சுலோகத்தில், "தயா தேவியே, ஜீவாத்மா என்னும் உழவன், எம்பெருமானைச் சரணடைவதாகிய சிறிய அளவிலான முயற்சியைச் செய்து, மோட்சம் என்னும் பெரிய விளைச்சலைப் பெறுவதற்கு உன் திருவருளே காரணம்" என்று கூறுகின்றார்.

அதற்கடுத்த இருபத்தோராவது சுலோகத்தில், "இப்பூவுலகத்தில் திருவேங்கடமுடையான் என்ற பெரிய உழவன் தான் சிரமப்பட்டுப் பயிரிட்ட சரணாகதர்கள் என்னும் பயிர் செழித்து வளருவதை மிகவும் உயர்ந்ததான திருமலையின் சிகரம் என்னும் பரண்மேல் நின்றபடி பார்வையிட்டு மகிழ்கின்றான். அந்தப் பயிர்ச்செழிப்புக்கும், அதனால் நம் திருவேங்கடமுடையான் அடையும் திருவுள்ளக் களிப்பிற்கும் தயாதேவியாகிய உன்னுடைய கருணைப் பிரவாகம் அன்றோ காரணம்! என்று கூறி மகிழ்கின்றார் ஸ்ரீவேதாந்த தேசிகர்.

இவ்விதமாக ஜீவாத்மா, பரமாத்மா இருவரையுமே உழவர்களாக உருவகித்துக் கூறிய ஸ்ரீவேதாந்த தேசிகரின் கற்பனைத் திறன் நம்மை மெய் மறக்கச் செய்கின்றது.

*"நீசனேன் நிறைவொன்றுமிலேன் என் கண் பாசம் வைத்த பரம்சுடர்ச் சோதிக்கே"* என்று நம்மாழ்வார் இறைஞ்சுகின்றார். ஸ்ரீவைஷ்ணவப் பெரியவர்கள் இதனை "நைச்சியானுஸந்தானம்" என்று கூறுவர்.

சுவாமி தேசிகன் தம்முடைய தயா சதகத்தின் முப்பதாவது சுலோகத்தில், குற்றங்களை அதிகமாகப் புரிந்த அபராத சக்கரவர்த்தி என்று தம்மையே குறிப்பிடுகின்றார்.

அதே சமயம் தயாதேவியோ கருணை என்னும் பெரும் குணத்துக்குப் பேரரசியாக (ஸார்வபௌமீ) இருக்கிறாள். அப்படிப்பட்ட தயாதேவி பேரருள் புரிந்து தம்மைத் திருவேங்கடமுடையானுடைய திருவடியின் கீழ் நிலைத்திருக்கச் செய்ய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றார்.

இது போன்று மேன்மேலும் பல உயர்ந்த கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் இந்த தயாசதகத்தைப் பொருளுணர்ந்து படிப்பது, எம்பெருமான் திருவேங்கடமுடையானிடம் ஆழ்ந்த பக்தியை ஏற்படுத்தி அவனுடைய திருவடிகளையே சரணடைய வைப்பதாகும். திருவேங்கடமுடையான் பிரம்மோத்ஸவம் கண்டு தன்னுடைய திருவுள்ளம் உகக்கின்ற இந்த நல்ல சந்தர்ப்பத்தில் அவனுடைய பட்டமஹிஷியாக விளங்கும் தயாதேவியின் அருமை பெருமைகளை ஸ்ரீவேதாந்த தேசிகர் அருளிய தயாசதகத்தின் துணை கொண்டு ஓதி உணர்ந்து பேரருள் பெறுவோமாக!

*–திரு. காயார் கோமடம் சேஷாத்ரிதாசன்,*
*காஞ்சிபுரம்*




## "ஸ்ரீவாரி சேவை"

மானிட சேவையே மாதவ சேவை என்று சேவை புரிந்த ஆழ்வார் தொண்டரடிப் பொடியாழ்வார் மாதவனின் சேவை புரிந்தது நாம் அனைவரும் அறிந்ததே. திருவேங்கடமுடையானின் பிரம்மாண்ட சமஸ்தானத்தில் தி.தி.தே. "ஸ்ரீவாரி சேவை" என்ற மகத்தான சேவையை திருவேங்கடமுடையானின் பக்தர்களுக்கு சேவை புரிய ஓர் அமைப்பு நிறுவியுள்ளது. இச்சேவையின் மகத்தான பணியானது திருமாலின் அடியவர்களுக்கு எந்நேரமும் சேவை புரிவதே ஆகும். அவ்வகையில் இச்சேவகர்கள் திருமலையில் பல்வேறு சேவைகளைப் புரிகின்றனர். அதாவது பக்தர்களை க்யூ வரிசையில் ஒழுங்குபடுத்துதல், தண்ணீர் வழங்குதல், மாற்று திறனாளிகள் மற்றும் மூத்த குடிமக்களுக்கு அவர்களுக்குத் தேவையான உதவியைப் புரிதல், அன்னதானக் கூடங்களில் பல்வேறு சேவை புரிதல், விழாக் காலங்களில் பல்வேறு வகையில் பலருக்கும் சேவை புரிந்து அனைவரின் தேவைகளை எவ்வித எதிர்ப்பார்ப்பும் இன்றி, என்றும் சேவை புரிந்து வருகின்றனர்.

திருமலை சார்ந்த கோயில்களிலும் இவர்களுடைய சேவை தொடர்கிறது.








கோயிலுக்கு நேர்ந்திருந்தேன், அதான் மொட்டை போட்டேன் என்று சொல்வார்கள். முடி வளர்வதால்தானே மொட்டை போட்டிருக்கே. விரலை வெட்டுவாயா என்று கிண்டலடிப்பார்கள். ஆனால், முடி காணிக்கை என்பது மரணத்திற்கு ஒப்பானது தெரியுமா?

மகாபாரத போர் நடக்கும் போது இறுதி நாளில் குரு துரோணாச்சாரியாரின் புதல்வன் அஸ்வத்தாமன் திரௌபதியின் ஐந்து குழந்தைகளையும் பாண்டவர்கள் என்று நினைத்து வெட்டி சாய்த்தான். விடிந்ததும் குழந்தைகளைக் கண்டு சொல்லொணாத் துயரம் அடைந்தார்கள் பாண்டவர்கள்.

இத்தகைய கொடூரச் செயலை செய்த பாதகனை வெட்டி வீழ்த்தாமல் விடமாட்டேன் என்று அர்ஜுனன் சபதமிட்டான். அன்று மாலையே கள்வன் அஸ்வத்தாமன் என்று தெரிந்து இழுத்து வரப்பட்டான்.

குருவின் மகனா என்று பாண்டவர்களும், திரௌபதியும் அதிர்ந்து போனார்கள். யாராக இருந்தால் என்ன… இவன் தலையைக் கொய்தாமல் விடமாட்டேன் என்றான் அர்ஜுனன். அர்ஜுனனை யாராலும் தடுக்க முடிய வில்லை. அப்போது அங்கு வந்த ஸ்ரீகிருஷ்ணர் “அவன் தலையை எடுக்க வேண்டுமென்பதில்லை. அர்ஜுனா… அவன் சிகையை மழித்து விடு. அது அவன் மரணத்திற்கு ஈடானது” என்றார்.

உங்கள் ஜாதகத்தில் கிரகங்கள் கடும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை அறிந்தாலோ, உங்களுக்கு மரணதிசை நடக்கிறது என்பதை முன் கூட்டியே தெரிந்து கொண்டாலோ உங்கள் குல தெய்வம் அல்லது இஷ்ட தெய்வத்திடம் தலைமுடி காணிக்கை செலுத்துவதாக வேண்டிக் கொள்ளுங்கள். தலை போகும் பேராபத்திலிருந்தும் தப்பித்துக் கொள்வீர்கள்.

பிறந்த குழந்தைக்கு 1,3 என்பது ஒற்றைப்பட வயதில் குலதெய்வ கோயிலில் பூஜை செய்து தலைமுடி காணிக்கை அளிப்பது வழக்கம்.

விஞ்ஞானத்திலும் மெய்ஞ்ஞானத்திலும் தலைமுடி மழித்தல் ஆரோக்கியமான வாழ்வுக்காகவே என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

**திருமலையில் தலைமுடி காணிக்கை :**

“ஸ்ரீநிவாச கல்யாணம்” வைபவத்தில் ஸ்ரீமந் நாராயணன் மஹாலக்ஷ்மியைத் தேடிக் கொண்டு பூலோகத்தில் ஓர் புற்றில் தவம் செய்து கொண்டிருந்த அவருக்கு பசு பால் சுரந்து, பெருமாளின் பசியாற்றிட, இதனைக் கண்ணுற்ற பசு மேய்ப்பாளன் பசுவின் மீது ஆயுதம் வீசி எறிந்தார். ஆயுதம் பெருமாளான ஸ்ரீநிவாசரின் தலையில் பட்டு காயம் ஏற்பட்டு இரத்தம் வழிந்தது.

எம். அசோக் ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி
9750333265



பெருமாளுக்கு காயம் ஏற்பட்ட இடத்தில் இருந்த தலைமுடி எல்லாம் விழுந்து விட்டது. ஒருமுறை நீளா எனும் அரசி ஸ்வாமியை தரிசிக்க திருமலைக்கு வந்தார். அப்பொழுது ஸ்வாமி சயனித்திருந்தார். ஸ்வாமியின் தலையில் சிறிது முடி இல்லாததை கவனித்த நீளா தனது தலை முடியைப் பிடுங்கி பெருமாளின் தலையில் வைத்து ரத்தம் வழிதலை நிறுத்த முயற்சித்தாள்.

பெருமாள் தனக்காக தனது தலைமுடியை வழங்கிய அவள் முன் தோன்றி உனக்கென்ன வரம் வேண்டும் எனக் கேட்டார். அப்பெண்மணி தங்களை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு திவ்ய தரிசனம் தந்தருள வேண்டும் என்று வரம் கேட்டாள். அதற்கு பெருமாளும், “உனக்கென்று நீ எதையும் கேட்காமல் பொதுநலமாக பக்தர்களுக்காக வரம் கேட்ட உன் பரந்த பெரிய மனதைப் பாராட்டுகிறேன்” என்றார். எனக்காக உன் தலை முடியைத் தந்த உன்னைக் கௌரவிக்கும் வகையில் இந்த திருமலையில் கலியுகம் முடியும் வரையில் என்னுடைய பக்தர்கள் வேண்டுதலுக்காக செலுத்தும் திருமுடி காணிக்கையை உனக்கே சொந்தம் என அருளினார். திருமலையில் வேறெங்கும் காணாமுடியாத வகையில் திருமுடிக் காணிக்கை அதிகமாகவே உள்ளது.



ஒரு காலத்தில் கல்யாணி நதிக் கரையில் இந்த மொட்டை அடித்தல் நடைபெற்று வந்தது. நாளடைவில் மொட்டை அடிப்பது திருமலையில் செய்யப்பட்டது. இதை நினைவு கூறும் விதத்தில் இப்பொழுதும் மொட்டை அடிக்கும் இடம் “கல்யாண கட்டா” என்ற பெயரில் அமைந்துள்ளது. இந்த நிகழ்ச்சிகள் இப்பகுதி மக்களிடையே பேச்சு வழக்கான ஒன்றாகும்.



## நரசிம்மரான திருவேங்கடவன்

ஸ்ரீமந்நாராயணனே முழுமுதற் பரம்பொருள் என்று வாதாடி நிர்ணயம் செய்த சிறுவனான பிரகலாதனை, பெற்ற மகனென்றும்பாராமல் கொடிய சித்ரவதைகளைப் பண்ணி கொல்ல முயன்றான் இரணியன். முடிவில் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் எம்பெருமான் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என பிரகலாதன்அறுதியிட்டு கூறினான்.

இரணியன் அரண்மனையினுள் இருந்த தூணினை தம்முடைய கதாயுதத்தால் பலமாகத் தாக்கினான். எம்பெருமான் பிளந்த தூணிலிருந்து நரசிம்ம உருவில் கண்களில் தீப்பொறி பறக்க வெளிவந்து இரணியனை நகங்களால் பற்றி வாசற்படியில் அமர்ந்து அவனை மடியினில் கிடத்தி, மார்பினைப் பிளந்து, வயிற்றினைக் கிழித்து குடலினை வெளியே உருவி குருதி பெருக்கெடுத்தோட வதம் செய்து பிரகலாதனை காத்து அருளினார். திருவேங்கடவனிடம் நரசிம்ம அவதாரத்தை சேவித்த திருமங்கையாழ்வார் மலைகளின் வடிவாகிய ஆதிசேஷன் படுக்கையிலே எழுந்தருளியிருக்கும் திருவேங்கடவன் தம்மை தாமாகவே மனதில் நிறுத்தி அருள வேண்டுமென பாசுரமிடுகிறார்.

*தூணாய் அதனூடு அரியாய் வந்து தோன்றி*
*பேணா அவுணன் உடலம் பிளந்திட்டாய்*
*சேணார் திருவேங்கட மாமலைமேய*
*கோணா கணையாய் குறிக்கோள் எனை நீயே*





# திருமலை குறித்த குறுக்கெழுத்துப் புதிர் (74)

தொகுப்பு : **திரு. டி.ஆர்.மனோகர், தஞ்சாவூர், 9942644807**



| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | | | | | | ■ |
| 2 | | | | | | ■ | 3 | ■ | 4 | | 5 |
| | | ■ | | | | ■ | | | | | |
| | | ■ | | | | ■ | | | | | |
| | | 6 | | | | ■ | | | | | |
| | | | | | | 7 | | | | | |
| | 8 | | | | | | | | ■ | | |
| 9 | | | 10 | 11 | | | | 12 | ■ | | |
| | ■ | ■ | | ■ | ■ | | | | | 13 | |
| | ■ | ■ | | ■ | ■ | | | | | | 14 |
| ■ | | | | | | | 15 | ■ | ■ | ■ | |
| | | | | 16 | | | | | | | |

## இடமிருந்து வலம்

1. திருமலையில் கோயில் கொண்ட ஆதி மூர்த்தி.....(6)
2. திருமலையில் அடியார்களின் சேவை.......(5)
9. ஆதிமூல நாதனுக்கு அதிகாலையில் நடக்கும் முதல் சேவை.....(6)
16. பிரம்மன் தொடங்கிய விழா.....(8)

## வலமிருந்து இடம்

1. ஸ்ரீபத்மாவதி தாயாரின் வளர்ப்பு தந்தை.....(6)
13. திருக்கல்யாணத்திற்கு கடனை வட்டியாக வழங்கியவர்......(4)
14. திருமலையில் பிரம்மோத்ஸவம் நடக்கும் தமிழ் மாதம்....(5)
15. திருவிழா தொடங்கும் நாளில் கொடியேற்றம்.....(7)
16. முதன் முதலில் பிரம்மோத்ஸவ விழாவை நடத்தியவர்......(5)

## மேலிருந்து கீழ்

1. ஸ்ரீநிவாச மூர்த்தியின் சந்நிதானம்.......(8)
2. உத்ஸவ மூர்த்தியின் பெயர்.....(9)
3. ஏழுமலையான்......(8)
4. திருமலையில் திருக்கோயிலை அமைத்த மன்னன்......(5)
5. ஸ்ரீபத்மாவதி தாயார் கோயில் கொண்டுள்ள ஊர்.....(11)
6. பிரம்மோத்ஸவ நிறைவு நாளில் நடக்கின்ற புனித நீராட்டு.....(4)ஸ்நானம்
7. காணக்கண்கோடி தேவைப்படுகின்ற கருட சேவை.....(7)
10. வேங்கடேச பகவானின் ஒரு பெயர்....(3)

## கீழிருந்து மேல்

8. ஸ்ரீபத்மாவதி தாயாரின் வளர்ப்புத் தாய் ....(5)
10. திருமலையில் உள்ள புனிதத்தீர்த்தம்......(6)
11. வேங்கடச பெருமாள் விரும்புகின்ற நைவேத்தியம்.....(6)
12. ஸ்ரீநிவாசப் பெருமாளின் வளர்ப்புத் தாயார்......(6)
13. திருமலை திருக்கோயிலில் படியாய்க் கிடந்து பவளவாய் காணும் ஆழ்வார்......(9)

புதிருக்கு விடை அறிய 44ம் பக்கம் பார்க்கவும்...



# திருவேங்கடம் அடை நெஞ்சே

– திரு. ஆர். கண்ணன்,
பெங்களூரு. 9343583416

**"கலௌ வேங்கடநாயக:"** என்றபடி கலியுகத்தில் திருவேங்கடவனே கண் கண்ட தெய்வம் என்று எல்லோராலும் போற்றப்பெறுபவர். இதற்கு, நாள் தோறும் லக்ஷக்கணக்கான பக்தர்கள் வேங்கடவனை க்ஷணகாலமே பார்த்தும் கூட, பரவசம் அடைவதே பிரத்யக்ஷ பிரமாணம்.

மேலும், ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம் ஸ்தோத்ரத்தில் **"த்வத் கோபுர"** என்று தொடங்கும் சுலோகம் "ஸ்வர்கம் மற்றும் மோக்ஷம் விரும்பும் பக்தர்கள் கூட மறு பிறவி எடுத்து இந்த எம்பெருமானைக் கண்டு அவனுக்கு கைங்கைர்யம் செய்ய விரும்புகிறார்கள்" என்று எடுத்துரைப்பதினின்றும் இதன் பெருமையை நன்கு உணரலாம்.

**"அகலகில்லேன் இறையுமென்று அலர்மேல் மங்கையுறை மார்பா, அமரர் முனிகணங்கள் விரும்பும் திருவேங்கடத் தானே! உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே"** என்றல்லவா சரணாகதி செய்தார்.

பெரியாழ்வாரும், **"சென்னியோங்கு தண் திருவேங்கடமுடையாய்!... உன் சக்கரப்பொறி ஒற்றிக் கொண்டு நின் அருளே புரிந்திருந்தேன்"** என்று அருளிச் செய்தார். கோதை நாச்சியாரும் திருவேங்கடவனுக்கல்லவோ மேகத்தைத் தூது விட்டாள்.

**"குளிரருவி வேங்கடத்தென் கோவிந்தன் குணம்பாடி அளியத்த மேகங்காள் ஆவி காத்திருப்பேனே"** என்று அருளிச்செய்தாள்.

குலசேகரப்பெருமாளும், **"செம்பவள வாயான் திருவேங்கட மென்னும் எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனும் ஆவேனே"** என்று திருமலை ஸம்பத்தை வேண்டினார்.

திருமழிசைப்பிரானும், **"வெற்பென்று வேங்கடம் பாடினேன் வீடாக்கி நிற்கின்றேன்"** என்று அருளிச் செய்தார்.

திருமங்கை ஆழ்வார் திருவேங்கடத்திற்கு நான்கு பதிகங்கள் அற்புதமாக அருளிச் செய்துள்ளார்.

அதில் எம்பெருமானின் கல்யாண குணங்களையும் திவ்ய சேஷ்டிதங்களையும் விவரித்து, ஒரு பதிகம் முழுவதும் **"திருவேங்கடம் அடை நெஞ்சே"** என்று தன்னுடைய மனதிற்கு உபதேசம் செய்கிறார்.

முதலாழ்வார்கள் மூவரும் திருவேங்கட எம்பெருமானிடம் அளவில்லாத காதல் கொண்டு, அவனைத் தங்கள் நூற்றந்தாதிகளில் அற்புதமாக மங்களாசாசனம்



## திருமலையில் இ-உண்டியல்

**திருமலைக்கோயிலில் உண்டியல் 25-07-1821 ஆம் ஆண்டு முதன்முதலில் நிறுவப்பட்டது. 25-07-1825 முதல் அதை "சிரிகொலுவு" என்று அழைத்தனர். பித்தளை கங்காளம் வடிவம் கொண்ட ஓர் பாத்திரத்தை (கொப்பரை) வெள்ளை நிறத் துணியின் அடியில் ஒன்பது அடி நீளம் இருக்கும்படி இறக்குவர். 75 கிலோ எடையுள்ள இந்த கொப்பரை 2016-ல் முதன்முறையாக திரு.கே.சுரேஷ் அவர்களால் வழுங்கப்பட்டது. இன்றைய இயந்திர காலத்தில் இணைய தளத்தின் வாயிலாக நாம் நினைத்த தருணத்திலே திருவேங்கடமுடையானுக்கு காணிக்கை செலுத்த தி.தி.தே. வழி வகை செய்துள்ளது. அதை பயன்படுத்தி நாம் இருக்கும் இடத்திலிருந்தே ஸ்வாமிக்கு காணிக்கையை செலுத்தி நம் பிரார்த்தனையை நிறைவு செய்யலாம்.**

செய்துள்ளனர். திருவேங்கடவன் ஒருபுறம் இருக்கட்டும். திருவேங்கட மலையையே நம் வினைகளை ஒழிக்கும் என்று நம்மாழ்வார் அருளிச் செய்கிறார்.

*"குன்றமேந்திக் குளிர் மழை காத்தவன்*
*அன்று ஞாலம் அளந்தபிரான், பரன்*
*சென்று சேர் திருவேங்கட மாமலை*
*ஒன்றுமே தொழநம் வினை ஓயுமே"*

எம்பெருமான் தானே விரும்பி இங்குவந்து நித்யவாஸம் செய்கிறான் என்றதாயிற்று. அதனால் தான் புண்ணியனாகிற பகவான் புகுந்த இடம் என்று ஸ்வாமி தேசிகன் சாதித்தாற்போலும். ஆம், ஆதி வராஹ க்ஷேத்திரமான இவ்விடத்தில் ஸ்ரீவராஹ பெருமான் அருள, திருவேங்கடவன் குடிகொண்டான் போலும். ஆழ்வார்கள் மட்டுமின்றி ஆசார்யர்களும் மண்டிக் கிடந்த திவ்ய தேசம் திருவேங்கடம்.

இங்கு திருமலை நம்பிகள் திருவேங்கடவனுக்கு தீர்த்த கைங்கர்யம் செய்து உகந்தார். அவருடைய சந்ததியர் இன்றும் அந்த கைங்கர்யங்களில் ஈடு பட்டுள்ளனர். ஸ்ரீ ராமாநுஜர் எம்பெருமானுக்கு சங்கு சக்ர கவசங்கள் வழங்கி பெருமாளுக்கு அழகு சேர்த்தார்.

ஸ்ரீ ராமாநுஜரின் நியமனப்படிஅவருடைய சிஷ்யரான அனந்தாழ்வான் நந்தவனம் அமைத்து எம்பெருமானுக்குப் புஷ்ப கைங்கர்யம் செய்து உகந்தார். ஸ்வாமி தேசிகன் இந்த எம்பெருமானின் தயை என்ற குணத்தை பற்றி 108 சுலோகங்கள் அடங்கிய "தயா சதகம்" என்னும் அற்புத ஸ்தோத்ரத்தை அருளிச்செய்தார்.

ஸ்ரீ அண்ணன் ஸ்வாமி இந்த எம்பெருமான் மீது ஈடுபட்டு அருளிச்செய்திருக்கும் "ஸ்ரீ வேங்கடேச ஸுப்ரபாதம்" மிகவும் பிரசித்தி பெற்று, உலக மெங்கும் ஒலிக்கிறது என்றால் மிகையாகாது. பெரும் இசைக்கலைஞர் ஸ்ரீ அன்னமாசார்யார் ஈடுபட்டு இருந்ததும் திருவேங்கடவனிடமே. அவருடைய பாடல்கள் இன்றும் எங்கும் ஒலிக்கின்றன.

திருவேங்கடம் நாளோத்ஸவம், பக்ஷ உத்ஸவம், மாஸோத்ஸவம், ஸம்வத்ஸர உத்ஸவம் என்றபடி வருஷம் முழுவதும் உத்ஸவங்கள் நிறைந்த க்ஷேத்ரம். திருமலை பிரம்மோத்ஸவம் அதிலும் கருடோத்ஸவம் உலகப் புகழ் பெற்றது. கலை நிகழ்ச்சிகளோடு, வேத பிரபந்த பாராயண கோஷ்டிகள் வலம் வருவது கண் கொள்ளாக் காட்சி. லக்ஷக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் உத்ஸவம்

இது என்றால் மிகையாகாது. இவ்வளவு ஜனத்திரள்களுக்குத் தேவையான மருத்துவ சேவை, தங்கும் வசதி, உணவு வசதி போன்றவற்றை செய்து தரும் தேவஸ்தானத்தை எவ்வளவு போற்றினாலும் தகும்.நாள் தோறும் கல்யாண உத்ஸவம், ஊஞ்சல் உத்ஸவம், ஆர்ஜித பிரம்மோத்ஸவம், ஆர்ஜித வசந்த உத்ஸவம், சஹஸ்ர தீபாலங்கார சேவை முதலியன திருவேங்கடவனுக்கே உரிய அசாதாரண உத்ஸவங்கள். இதைத் தவிர வாரம்தோறும் நடக்கும் சஹஸ்ர கலசாபிஷேகம் மற்றும் திருப்பாவாடை உத்ஸவம் போன்றவை சிறப்பூட்டுகின்றன.

திருவேங்கடம் வரும் பக்தர்களுக்கு, இலவச இடவசதி, மருத்துவ வசதி, உணவு வசதி மற்றும் போக்குவரத்து வசதி முதலியவைகள் அளிக்கப்படுகின்றன. அதற்கான செய்திகளும் பல ஊடகங்களில் மக்களுக்காக ஒளி பரப்பப்படுகின்றன. திருவேங்கடம் சென்று, எம்பெருமானை சேவிக்க முடியாமல் திரும்புபவர்கள் மிகவும் குறைவு, இல்லை என்றே சொல்லலாம். திருமலையில் எம்பெருமானை சேவிப்பதே பிரயோஜனம், வேறு பலனில் நோக்கமில்லை என்பார்கள் பெரியோர். ஒரு க்ஷண காலமே சேவிக்கப் பெறுபவர்கள் எம்பெருமானை நன்கு சேவித்தேனே என்று கூறும்போது அவர்கள் உள்ளத்தில் எவ்வளவு களிப்பு. திருப்பதி லட்டு பிரசாதம் உலகளவில் புகழ் பெற்றதன்றோ! திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஆன்மீகப் பணிகளுடன் பொது நலப் பணிகளையும் செய்து வருகிறது. கல்விக் கூடங்கள், மருத்துவமனைகள், கலாச்சார அமைப்புகள் இவைகளையும் அமைத்து மக்கள் பயனடையும் வகையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு இருக்கிறது. தி.தி.தேவஸ்தானம் இங்கு நடக்கும் நிகழ்ச்சிகளை ஸப்தகிரி பத்திரிகை மூலமும் தெரிவிக்கின்றது.

திருமலை திருப்பதி தேவஸ்தானம் தங்களுடைய பக்தி சானல் மூலம் உலக க்ஷேமத்திற்காக செய்யும் சுந்தரகாண்டம், பால காண்ட பாராயணங்கள், வேத பாராயணம், கீதா பாராயணம் போன்றவைகள் எவ்வளவு உயர்ந்த நோக்கங்கள் கொண்டது. மேலும், கோ ரக்ஷணம் போன்ற புண்ணிய செயல்கள் திருவேங்கடத்தின் சிறப்பைக் கூட்டுகிறது. அந்நியர் படையெடுப்பின்போது, திருவரங்கன் திருமலையையன்றோ அடைந்து தன்னை ரக்ஷித்துக்கொண்டான். அப்படியிருக்க இருள் தரு மா ஞாலத்தில் உழண்று கொண்டிருக்கும் நாம், நமது துக்கங்களைப் போக்கிக் கொள்ள திருவேங்கடம் அடையவேணுமல்லவா?

திருமலை ஒரு நேர்த்திக்கடன் செலுத்தும் க்ஷேத்ரமாக விளங்குகிறது. நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் முடி காணிக்கைச் செலுத்துகிறார்கள். சிலர் துலாபாரம் வகையில் பொருளாகச் செலுத்துகிறார்கள். எங்கும் கோவிந்தா! கோவிந்தா! என்று திருநாமம் ஒலித்துக்கொண்டேயிருக்கிறது. ''விநா வேங்கடேசம் ந நாதோ'' என்றும், ''ஸதா வேங்கடேசம் ஸ்மராமி'' என்றும் உறுதி பூண்டு திருவேங்கடவனை அடைந்தால், ''குறைவொன்றுமில்லை கோவிந்தா'' என்று உணரக்கூடும். மாஹாத்மியம் பொருந்திய திருவேங்கடவனைச் சென்று நாம் சேவித்தால் அவன் நமக்கு அருள்வான். அப்படி அங்கு சென்று சேவிக்க முடியாதவர்கள் மனதினால் அவனை அடைந்து வாழ்த்தி வணங்கினாலும் அருள் செய்வான். ஆகவே, அவனிடம் நீங்காத மனமுடையவனாக இருக்க அவனையே பிரார்த்திப்போமாக.

## திருமலையில் ஆனிவர ஆஸ்தானம்



திருவேங்கடமுடையானின் வருடாந்திர கணக்குகள் ஆடி மாதத்தின் முதல் நாளில் ஆரம்பமாகின்றன. இந்த முதல் நாளில் நடத்தப்படும் உத்ஸவத்தை தெலுங்கில் ஆனிவர ஆஸ்தானம் என்றும், தமிழில் ஆடிப் பூஜை என்றும் அழைக்கப்படுகிறது. “திரு ஆண்டு எழுத்து இடும் போது” (அதாவது வருட ஆரம்பம்) எனும் சொல் கல்வெட்டுகளிலும் காணப்படுகிறது. திருவேங்கடமுடையானுக்கு வருடம் முழுவதும் கிடைக்கின்ற வருமான கணக்குகளை ஒப்படைத்து, மீண்டும் புதிய கணக்குகளை இந்நாள் முதல் துவங்குவர்.

# திருமலையப்ப ஸ்வாமி
## வருடாந்திர பிரம்மோத்ஸவம்
### 2022 செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 05 வரை



28-09-2022
புதன் கிழமை
இரவு
ஹம்ச வாகனம்



28-09-2022
புதன் கிழமை
பகல்
சிறிய சேஷ வாகனம்



29-09-2022
வியாழக்கிழமை
பகல்
சிம்ம வாகனம்



29-09-2022
வியாழக்கிழமை
இரவு
முத்துப்பந்தல் வாகனம்

# திருமலையப்ப ஸ்வாமி
## வருடாந்திர பிரம்மோத்ஸவம்
2022 செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 05 வரை

30-09-2022 வெள்ளிக்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்



30-09-2022
வெள்ளிக்கிழமை
இரவு
சர்வபூபால வாகனம்



01-10-2022
சனிக்கிழமை
இரவு : கருட வாகனம்



01-10-2022
சனிக்கிழமை
பகல்
மோகினி அவதாரம்




# திருமலையப்ப ஸ்வாமி

## வருடாந்திர பிரம்மோத்ஸவம்

2022 செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 05 வரை



02-10-2022
ஞாயிற்றுக்கிழமை
இரவு : யானை வாகனம்



02-10-2022
ஞாயிற்றுக்கிழமை
பகல்
ஹனுமத் வாகனம்



03-10-2022
திங்கட்கிழமை
பகல்
சூரியப்பிரபை வாகனம்



03-10-2022
திங்கட்கிழமை
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

# திருமலையப்ப ஸ்வாமி
## வருடாந்திர பிரம்மோத்ஸவம்
### 2022 செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 05 வரை



**04-10-2022**
செவ்வாய்க்கிழமை
இரவு
குதிரை வாகனம்

**04-10-2022**
செவ்வாய்க்கிழமை
பகல்
திருத்தேர்

**05-10-2022**
புதன் கிழமை
பகல் : சக்கரஸ்நானம்

# அன்னமய்யா போற்றும் ஆனந்த நிலயன்

-திருமதி மைதிலி சம்பத், செகந்திராபாத்.



உலகில் வாழும் உயிர்கள் அனைத்திலும் அந்தர்யாமியாக விளங்குபவன் திருமலையில் விளங்கும் திருமகள் கேள்வன் திருவேங்கடவன். அவரைத் துதிக்க நினைக்கும்போதே *''கொண்டலலோ நெலகொன்ன''* அல்லது *''ப்ரஹ்ம கடிகின பாதமு''* நம் நினைவுக்கு வராமல் இருக்கிறதா!


*''ப்ரம்மமொக்கடே''* என்ற புகழ்பெற்ற பாடலில் தான் மேற்கண்டபடி உணவோ உறக்கமோ அடிப்படைத் தேவைகள் எல்லா ஜீவ ராசிகளுக்குமே சமம்தான். அனைவரின் இதயத்திலும் நீக்கமற விளங்குவது வேங்கடவன் தான் என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

முதலில் அவர் திருமலையைப் போற்றிப் புகழ்வதைப் பார்ப்போம்.

இந்தப்பாட்டு *''அதிவோ அல்லதிவோ''* அனைவரும் அறிந்ததே. இதோ பாருங்கள், பிரமிக்க வைக்கும் இந்த உயர்ந்த மலையை பிரமன் முதலியோருக்கும் அரிதானது. அனைத்து முனிவர்களுக்கும் இருப்பிடமானது. தேவதைகளுக்குஇருப்பிடமான தங்கமயமான சிகரங்களுடன் பிரகாசிக்கும் இம்மலையைப் பார்த்து ஆனந்தமடையுங்கள். இம்மலையே புருஷோத்தமனது இருப்பிடம். புனிதமானவற்றில் எல்லாம் புனிதமானது என்று பேசுகிறது.

*''கொண்டலலோ நெலகொன்ன கோனேடி ராயுடுவாடு''* அதாவது திருமலையின் அருகிலுள்ள புஷ்கரணிக்கு அரசன். அங்கே இருப்பிடம் கொண்டு மலைபோல் அளவில்லா வரங்களைத் தருபவன். மண்பாண்டம் செய்யும் குருவர்த்தி நம்பிக்கும், தொண்டைமான் சக்கரவர்த்திக்கும் கேட்டதைத் தந்தவன். அதாவது வரம்

தருவதில் ஏற்றத்தாழ்வு பார்க்காதவன். காஞ்சியில் வசிக்கும் திருக்கச்சி நம்பியைத் தன்னிடத்தே அழைத்துக் கொண்டவன். அனந்தாழ்வானுக்காக மகிழ்வுடன் மண் சுமந்தவனும், திருமலை நம்பியுடன் சம்பாஷிப்பவனும் கூட அவனே. நாம் பக்தி செலுத்தினால் வரங்களை அள்ளிச் சொரிபவனும் அவனே.



மகிமை வாய்ந்த திருமலையில் வேதங்களே பாறைகளும், தெய்வீகமே ஆறுகளும், பிரம்ம லோகமே சிகரங்களுமாகி ஸ்ரீநிவாசன் வசிக்கும் சேஷாத்ரி மலையானது என்கிறார் *''கட்டெதுர வைகுண்டம்''* என்ற பாடலில்,

*''ஜோ அச்சுதானந்த''* ஸ்ரீகிருஷ்ணன் மீது அன்னமய்யா பாடிய ஒரு அற்புதமான தாலாட்டு பாடல். இதில் கண்ணனின் பால்ய லீலைகளை பலவிதமாக வருணிக்கிறார்.

*''பாவயாமி கோபால பாலம்''* வியக்கத்தக்க மெட்டில் யமுனா கல்யாணியில் பாடப்படும் இந்தப் பாட்டு சமஸ்கிருதத்தில் அன்னமய்யா இயற்றியது. நான் கோபாலனையே வணங்கி அவனையே தியானிக்கிறேன். அந்த பாலகிருஷ்ணன் மிக அழகாக இடுப்பு ஒட்டியாணத்திலுள்ள முத்துக்கள் சப்தமிட ஒரு நடனம் போல் ஓடி வருகிறான். கையில் பந்துபோல புது வெண்ணெய். கால்களோ பிரும்மா மற்றும் பல தேவர்களால் தெய்வீக பாவனையோடு அலங்கரிக்கப்படுபவை. நிகரில்லா பரம புருஷனான வேங்கடவனாக

## வாமனரான திருவேங்கடவன்

**வாமனர் தம்முடைய திருவடியால் மூன்றடி நிலம் தானமாக வேண்டினார். மஹாபலி நீரினால் தானம் வார்த்தபின், வாமனர் மண்ணிற்கும் நெடிது வளர்ந்து ஓரடியால் பூலோகத்தினையும், இரண்டாவது அடியால் விண்ணுலகத்தினையும் அளந்து, மூன்றாவது அடிக்கு இடம் போதாமையால் மகாபலியின் விருப்பப்படி அவனது தலைமேல் வைக்க, மகாபலி பாதாள லோகத்திற்குள் அழுத்தப்பட்டான். இந்திரனுக்கு திருவிக்கிரம அவதாரத்தினால் மறுபடியும் இந்திர பதவி கிடைத்தது. பொய்கையாழ்வார் வாமன அவதாரத்தினை திருவேங்கடவனிடம் அனுபவித்து அடியார்களுக்கு பரமபத புருஷார்த்தமான பேரின்ப வாழ்வினை நிறைவோடு பெருமாள் அருளுவதாகப் பாசுரமிடுகிறார்.**

*வழிநின்று நின்னைத் தொழுவார் வழுவா*
*மொழிநின்ற மூர்த்தியரே யாவர் - பழுதொன்றும்*
*வாராத வண்ணமே விண்கொடுக்கும், மண்ணளந்த*
*சீரான் திருவேங்கடம்.*





இராம அவதாரத்தில் குரங்கினத் தலைவனான சுக்ரீவன் தம்முடைய அண்ணனான வாலி மிகுந்த பலம் வாய்ந்தவன் என்றும், கிஷ்கிந்தையில் உள்ள வனத்தில் வரிசையாக உள்ள ஏழுமரங்களை ஒரே அம்பினால் துளையிட வல்லமையுள்ளவனாலேயே வாலியினை அழிக்க முடியும் என்றான். இராமனும் ஒரே அம்பினால் ஏழு மரங்களையும் துளையிட்டார். சுக்ரீவனும் அனுமனோடும் குரங்கினப் படையோடும் இராமனுடன் தோழமை பூண்டு இலங்கையில் சீதாதேவி இருப்பது அறிந்து வங்கமா கடலில் அணைகட்டி இலங்கைச் சென்று, இராவணனை வதம் செய்த இராமபிரான் சீதாபிராட்டியினை மீட்டதை நம்மாழ்வார் திருவேங்கடவனிடம் அனுபவித்துப் பாசுரமிடுகிறார். திருவேங்கடத்துள் நின்ற எம்பெருமானே என்னுள் புகுந்து எனக்கு அருள் செய்து விட்டு, என்னை விட்டு எங்கும் சென்றுவிட வேண்டாம் என இறைஞ்சுகிறார் நம்மாழ்வார்.

*எந்தாய்! தண் திருவேங்கடத்துள் நின்றாய்! இலங்கை செற்றாய்! மராமரம்*
*பைந்தாள் ஏழுருவ ஒருவாளி கோத்த வில்லா!*
*கொந்தார் தண்ணந் துழாயினாய்! அமுதே! உன்னை என்னுள்ளே குழைத்த எம்*
*மைந்தா! வானேறே! இனி எங்குப் போகின்றதே!.*

# ஸ்ரீராமரான திருவேங்கடவன்



திருமலையுள் விளங்குகிறான் என்று நெஞ்சுருகப் பாடுகிறார்.

*''அந்தரிகி அபயம்மு இச்சு சேயி''* உலகம் முழுவதும் உள்ள அனைவரையும் காப்பாற்றும் திருக்கரங்கள் இந்த திருவேங்கடமுடையானதுதான் என்று தொடங்கிப் பாடுகிறார் அன்னமய்யா. இந்தத் தங்கத் திருக்கரங்கள் ஜொலிப்பது மட்டுமின்றி அழகானவை. பாங்கானவை என்கிறார். அதன் பிறகு வேதங்களைக் கடலிலிருந்து மீட்டதும் (மச்சாவதாரம்), பூமித்தாயை அன்போடு அனைத்துக் கொண்டதும் (வராகம்), பிறகு நரசிம்மமானவனும், மஹாபலியிடம் தானம் கேட்டதும் (வாமனாவதாரம்) என்று எல்லா அவதாரங்களையும், இன்னும் வரப் போகும் கல்கி அவதாரத்தையும் சேர்த்துப் பாடுகிறார்.

*''தெலிசிதே மோக்ஷமு''* ஹம்ஸநாத ராகத்தில் அழகாகப் பாடப்படும் பாடலிது. அற்புதமான தத்துவங்களை எளிதாகச் சொல்லும் பாடல்.

வாழ்க்கையின் நிஜ அர்த்தத்தை அறிந்து கொண்டால் அதுதான் மோட்சம். ஆசைகளற்றவர் யாரோ அவருக்கேது மகிழ்ச்சியும் துக்கமும்? பலன் எதிர்பாராத யோக சாதனையாளருக்கு பாபமும், புண்ணியமும் ஏது? உணவே இன்றி வாழ்பவர்க்கு அமுதமென்ன, விஷமென்ன? திருவேங்கடமுடையானை மனதில் கொண்டவருக்கு கர்ம பலன் இம்மையிலோ மறுமையிலோ கிடையாது என்பது தான் இந்தப் பாடலில் அவரது துணிபு.

திருவேங்கடமுடையானின் பாதங்களைப் போற்றிப் புகழ்ந்து அன்னமய்யா பாடும்

# ஸ்ரீகிருஷ்ணரான திருவேங்கடவன்

வடமதுரையில் பிறந்து ஆயர்பாடி கோகுலத்தில் நந்தன் மாளிகையில் யசோதையின் பாசப் பிணைப்பில் வளரும் கண்ணபிரான், ஆயர்பாடியில் பற்பல லீலைகள் புரிந்து, கோபியரின் இல்லங்களில் நண்பர்களோடு தயிர் வெண்ணெய் களவாடி விளையாடுவதை யசோதையிடம் முறையிடுகின்றனர் கோபியர். ஆயர்குலத்தவர் படையலை இந்திரனுக்கு சமர்ப்பிக்காமல் கண்ணனுக்கு முதன்முதலில் நிவேதனம் செய்தனர். கோபம் கொண்ட இந்திரன் கல்மழையினை இடைவிடாது ஏழு நாட்கள் பெய்வித்தான். கண்ணன் கோவர்த்தன மலையினை பெயர்த்து குடையாகப் பிடித்து ஆயர்களையும், ஆநிரைகளையும் காத்தருளினான். அவதாரத்தில் குன்றெடுத்துக் காத்த எம்பிரான் அர்ச்சையில் திருவேங்கடமலைமேல் நின்ற கோலத்தில் சங்கு சக்ரதாரியாய் அடியார்களுக்கு சேவை சாதித்தருள்வதை திருமங்கையாழ்வார் அனுபவிக்கிறார்.

*நின்றமா மருதிற்று வீழ நடந்த*
*நின்மலன் நேமியான்*
*என்றும் வானவர் கைதொழும்*
*இணைத் தாமரையடி எம்பிரான்*
*கன்றிமாரி பொழிந்திடக்*
*கடிதாநிரைக் கிடர் நீக்குவான்*
*சென்று குன்றமெடுத்தவன்*
*திருவேங்கடமடை நெஞ்சமே.*





தசாவதாரத்தொகுப்பு : திரு. ஏ.கே. கோபி,
கள்ளக்குறிச்சி, 94438 78592

இப்பாடலை கேட்கும்போது எவராலும் மெய் சிலிர்க்காமல் இருக்க முடியாது. அதனாலேயே இப்பாடல் மிகவும் பிரசித்தி பெற்றிருக்கிறது.

*''ப்ருஹ்ம கடிகின பாதமு''* என்று தொடங்கும் இந்தப் பாடலில் ஞானத்தை அளிப்பவை பிரும்மா பூஜித்த இந்தப் பாதமே. பூமியை அளந்ததும், பலி தன் தலையில் தாங்கியதும், ஆகாயத்தின் உச்சியைத் தொட்டதும், பசுக்களைக் காத்ததும், யோகி, முனிவர்களுக்கெல்லாம் எவ்வளவோ வரங்கள் அளிப்பதுமான திருப்பாதம் இதுவே (திருமலையின் மண்ணே மோட்சம் எனச் சொல்வது உன் பாதமே).

*''எம்த மாத்ரமுன''* இது பலரின் பலவிதமான கருத்துக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பாடல் என்றே கூறலாம். உன் பக்தர்கள் உன்னை எத்தனையோ விதமாகக் காண்கிறார்கள். ஆழ்ந்து சிந்திக்க சிந்திக்க உன்னை அதிகமாக உணர்கிறார்கள். வைஷ்ணவர்களால் விஷ்ணுவாகவும் எனத் தொடங்கி ஷண்மதத்தினராலும் அவரவர் தெய்வமாகப் பார்க்கப்படுகிறாய். அவரவர் விரும்பியபடி அவரவருக்குக் காட்சி அளிக்கிறாய்.நீ என்னுடன் இருந்தால் எனக்கு ஒரு குறைவும் இல்லை. தாமரைக்கொடி தடாகம் முழுவதும் பரந்திருப்பதுபோலும், கங்கை நதி அருகே அந்த ஜலமே ஊறுவது போலும் நீ என்னை அணைத்துக் கொண்டிருக்கும்போது என் பக்திக்கு குறை ஏதுமில்லை. உன் திருவடிகளே என் புகலிடம் இது மட்டுமே என் தத்துவம்.

இது போன்று அன்னமய்யா வேங்கடவனே இராமன், கிருஷ்ணன், நரசிம்மன் அனைத்தும் ஆகிறான். வேங்கடவனின் திருக்கரங்கள், திருப்பாதங்கள் என்று மட்டுமின்றி தசாவதாரங்களையும், நவரத்தினங்களையும் மற்றும் அந்தத் திருமலையின் அழகையும் வருணித்து வரங்கள் அள்ளித்தரும் அவனை அனைத்து விதமாகவும் போற்றி வணங்குகிறார். அவருக்கு எல்லா தெய்வங்களும் திருவேங்கடமுடையானே ஆவார்.

# திருவேங்கடவன் திருவருள்

**ஹை**தராபாத் நகரில் நடைபெற்ற மிகப் பெரிய கண்காட்சியில் கைத்தறி ஜவுளி விற்பனைப் பிரிவில் பணியாற்றிட சென்று 2 மாதம் தங்கியிருந்துவிட்டு ஊருக்குத் திரும்பும் வழியில் திருப்பதியில் ஒரு நாள் தங்கி திருவேங்கடமுடையானை தரிசனம் செய்யும் வாய்ப்பு கிடைத்தது. கோயில் அருகே உள்ள தெப்பக்குளத்தில் நீராடினோம் நானும், என்னுடன் இணைந்து வந்திருந்த நண்பரும், அப்போது நீராடியபின் கைப்பையில் நான் கொண்டுவந்திருந்த சீப்பு மட்டும் காணாமல் போய் இருந்தது கண்டு எனது நண்பர் மிகவும் கவலை அடைந்தவராய் என்னிடம், திருமலை கோயில் வளாகத்தில் வைத்து ஒரு பொருள் தொலையக் கூடாது என மிகவும் கவலையுடன் கூறினார்.

நான் அவரிடம் சொன்னது, நெசவாளராகிய நான் பாடுபட்டு வாங்கிய சீப்புதானே தொலைந்தது. நான் வருத்தமடையவில்லையே. நீங்கள் ஏன் வருத்தம் கொள்கிறீர்கள். இங்கு அனைவருக்கும் அருளும் திருமலையான் எனக்கு நிச்சயம் கிடைக்கச் செய்வார் என்றேன். அதற்கு நண்பர் பதிலாக சற்று கிண்டலாக சுவாமி வந்து இந்தாபிடி என்று சீப்பை தருவாரா? என்றார். சரி கவலையை விடுங்கள் என்று கூறிவிட்டு திருமால் தரிசனம் கண்டு ஊருக்கு திரும்ப ரயில் ஏறி அமர்ந்தோம். ரயில் 1/2 மணி நேரம் கழித்து கிளம்பியது. மெல்ல மெல்ல ஊர்ந்து சென்று கொண்டிருந்த வேளையில் ஒரு வியாபாரி ரயிலில் வேகமாக ஓடிவந்து என்னிடம் ஜன்னல் வழியாக சீப்பு ஒன்றை கொடுத்தார். என்னவிஷயம் என்று கேட்க, அவரோ என்னிடம் உள்ள பொருளை தங்களுக்கு ஏலத்தில் தர இயலாத நிலை. ஆனாலும், ஏலம் கேட்டமைக்காக ஏதேனும் சிறு பொருளை இலவசமாகத் தருவது தான் எனது வாடிக்கை. ஆனாலும், அப்போது தருவதற்கு மறந்துவிட்டேன். இப்போது தான் நினைவுக்கு வந்தது. உடனடியாக வந்து தருகிறேன், பெற்றுக் கொள்ளுங்கள் என்று கூறினார். நானும் சீப்பை பெற்றுக் கொண்டேன்.

இக்காட்சியை கண்ட எனது நண்பருக்கு உடல் புல்லரித்துவிட்டது, பேசமுடியவில்லை. சில நிமிடங்கள் அமைதியாய் இருந்தபின் சுதாரித்துக் கொண்டு என்னிடம் ‘‘கிருஷ்ணா நீ கூறியபடியே உனக்கு புதிய சீப்பு கிடைத்துவிட்டதே” என்று வியந்து போனார். அவரது கண்களில் ஆனந்த கண்ணீரே வந்துவிட்டது. இந்த சம்பவம் குறித்து அவரது குடும்பத்தாரிடம் கூறி நான் அங்கு சென்ற சமயமெல்லாம் நினைவு கூர்வார். நானும் இன்று வரை திருமலைக்குச் சென்று வரும் உறவினர்கள் தரும் பிரசாதம் பெற்றுக்கொள்ளும் சமயம் அன்று நடந்ததை நினைத்து இறைவனுக்கு நன்றி கூறி வருகிறேன். திருப்பதி ஏழுமலையான் எனது நம்பிக்கையை மெய்ப்படுத்திக் காட்டியுள்ளார்.



திரு. எ. கிருஷ்ணன்,
திருநெல்வேலி,
9486300266



# இராமாநுஜ சம்பிரதாயத்தை நிலை நாட்டி வரும்

# ஜீயங்கார் அமைப்பு

*-திரு. அத்தி. ரங்கராஜன், திருப்பதி.*

ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ திருமலை திருப்பதி கோயில்களில் என்றென்றும் கோவிந்த நாமங்கள் எதிரொலிக்கும். ஏழுமலை யானின் புகழ் பாரெங்கும் பல நூற்றாண்டுகளாக பரவி இன்று அவன் செல்வாக்கு உச்சத்தை அடைந்திருக்கிறது. இராமாநுஜர் நிறுவிய வைணவ சித்தாந்தத்தையும், கோயில் வழிபாட்டு முறையை யும் செவ்வனே கடைபிடித்து, குறையில்லாமல் அமுல்படுத்துவதன் மூலமாகவே இந்த திருக் கோயிலின் புகழ் வளர்ச்சி அடைந்திருக்கிறது.

உடையவர், பாஷ்யகாரர், இளையாழ்வார், எம்பெருமானார் மற்றும் எதிராஜர் என்ற பெயர்களால் அழைக்கப்பெற்ற ஸ்ரீராமாநுஜர் தனது வாழ்நாளில் மூன்று முறை செய்த திருப்பதி விஜயத்தின் போது ஏற்படுத்திய இந்த கட்டமைப்பு மற்றும் வழிபாட்டு முறை இன்றும் சிறிதளவும் பிசிறில்லாமல் கடைபிடிக்கப்படுகிறது. ஆகம முறைப்படி செய்யப்படும் உற்சவங்கள், ஹோமங்கள் மற்றும் வேள்விகள் போன்றவற்றை நிறுவியதோடு இல்லாமல், அவற்றை தொன்றுதொட்டு வரும் கோயில் வழிபாட்டு முறைக்குள் அவர் ஒருங்கிணைத்தார்.

ஜீயங்கார் என்பவர் ஒரு தனி மனிதர் அல்ல. இந்த விதிமுறைகளை கடைபிடித்து, முறையே செயல்படுத்த அந்த இராமாநுஜரே நிறுவிய ஒரு அமைப்பு. ஒரு ஸ்தாபனம். திருமலை கோயிலில் தினந்தோறும் அதிகாலை சுப்ரபாத சேவையில் இருந்து, இரவு ஏகாந்த சேவை வரையில் நடத்தப்படும் நிகழ்வுகள் மட்டும் அல்லாமல் வாரம்தோறும், பட்சம் தோறும் (பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை), மாதம் தோறும் மற்றும்



வருடம் தோறும் நடத்தும் உற்சவங்கள் உள்ளன. இவற்றை வார உற்சவம், பக்ஷ உற்சவம், மாத உற்சவம் மற்றும் வருடாந்திர உற்சவம் என்று முறையே அழைப்பதுண்டு. இவற்றை அமுல்படுத்த ஸ்ரீராமாநுஜர் அவர்களே நேரடியாக நிறுவிய அமைப்பு தான் இந்த ஜீயங்கார் என்கிற ஸ்தாபனம். ஸ்திரப்படுத்தப்பட்ட இந்த வழிமுறைகள் யாவும் விதிமுறைகளுக்கு உட்பட்டு, முறைகேடுகள் இல்லாமல், விலக்குகளுக்கு அப்பாற்பட்டு நடத்தப்



படுகிறதா என்று கண்காணிப்பதே இவர்களின் கடமையாகும். காலம் காலமாக இந்த ஜீயங்கார் எனும் அமைப்பு இதை செவ்வனே செய்து வருகிறது.

திருமலையில் பெரிய ஜீயங்கார் மடம் 1057 ஆம் ஆண்டில்இராமாநுஜரால் நிறுவப்பட்டது. அவர் ஸ்ரீதிருவேங்கட ராமாநுஜ பெரிய ஜீயர் என்பவரை முதல் ஜீயராக இந்த பதவியில் அமர்த்தினார். ஸ்ரீபெரிய கோவில் கேள்வி அப்பன் ஸ்ரீசடகோப ராமாநுஜ ஜீயர் இன்று இந்த "பெரிய ஜீயர்" எனும் மேதகு பதவியை ஏற்று இருக்கிறார். பிற்காலத்தில், சின்ன ஜீயங்கார் மடம் ஸ்தாபிக்கப்பட்டு ஒரு இளைய ஜீயரை இங்கு பொறுப்பில் அமர்த்தினார். பொதுவாக, இவரே பெரிய ஜீயரின் வாரிசாக கருதப்படுவார்.

இராமாநுஜர் திருமலை திருப்பதிக்கு மூன்று முறை விஜயம் செய்துள்ளதாக கோயில் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. இவரின் முதல் வருகையின் போதுதான் திருவேங்கடவனுக்கு சங்கு சக்கரம்



வழங்கியதாக ஐதீகம். இரண்டாம் வருகையின் போது கோயிலின் வெளி பிரகாரத்தை செப்பனிட்டு, திருமாட வீதிகளை உருவாக்கினார். அப்பொழுது தான் கோயிலில் ஆண்டுதோறும் நடைபெற வேண்டிய உற்சவங்கள் மற்றும் சடங்குகளை ஸ்திரப்படுத்தி, அதற்கான நெறிமுறைகளை நிலைநாட்டினார். மூன்றாம் முறை எழுந்தருளிய போது தான் கீழ்த் திருப்பதியில் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி சிலையை பிரதிஷ்டை செய்து, கோயிலை



புனிதப்படுத்தி அதை சுற்றி திருமாட வீதிகளையும் உருவாக்கினார். இவர் நிறுவிய இந்த ஏற்பாடுகளை முறைதவறாமல் நடைபெறும்படி கண்காணிப்பதே இந்த பெரிய மற்றும் சின்ன ஜீயங்கார்களின் கடமையாகும்.

திருமலை திருப்பதி கோயில்களின் ஆன்மீக நிகழ்ச்சிகளை பார்வையிடும் "தர்மகர்த்தாவாக" இந்த ஜீயங்கார் மடம் கருதப்படுகிறது. ஆழ்வார்கள் அருளிச் செய்த நாலாயிர திவ்யப் பிரபந்தங்களை



ஸ்ரீவைணவ சித்தாந்தத்தில் குறிப்பிட்டபடி பாராயணம் செய்து, அவற்றின் புகழை பாரெங்கும் பரப்பும் "திராவிட வேத அதிகாரி" எனும் பொறுப்பும் இந்த ஜீயங்காருக்கு உண்டு. திருவீதிவலங்களின் போது கோயிலுக்கு வெளியே எழுந்தருளும் உற்சவ மூர்த்திகளின் பாதுகாப்பு மற்றும் புனிதத் தன்மையைக் கடைபிடிக்கும் பொறுப்பு தேவஸ்தானத்தின் அதிகாரிகளுக்கு உள்ளது போலவே ஜீயங்காருக்கும் உண்டு. அதேபோல் வைகுண்ட





ஏகாதசிக்கு பதினோரு நாட்களுக்கு முன் தொடங்கும் "அத்யயன உற்சவம்" கூட ஜீயங்கார்களால் நடத்தப்படும் ஒரு சிறப்பான நிகழ்வு. இருபத்தி ஐந்து நாட்கள் நடக்கும் இந்த பிரபந்தம் ஓதும் நிகழ்ச்சியின்போது பன்னிரு ஆழ்வார்களும் சேர்ந்து அருளிய நாலாயிரம் எண்ணிக்கை கொண்ட பாசுரங்களும் சேவிக்கப் படும். இது கோயிலில் உள்ள ரங்கநாயக மண்டபத்தில் நடைபெறும்.



முதல் பதினோரு நாட்கள் "பகல் பத்து உற்சவம்" என்று அழைக்கப்படும். பின் வரும் நாட்களை "இராப்பத்து உற்சவம்" என்பார்கள். பிற வைணவ கோயில்களில் நடைபெறும் அத்யயன உற்சவத்தை தாண்டி இங்கு நடக்கும் ஐதீக உற்சவங்கள் திருமலைக்கே ஒரு சிறப்பம்சம். இருபத்தி இரண்டாம் நாள் ***''கண்ணிநுண் சிறுத்தாம்பு''***, இருபத்தி மூன்றாம் நாள் "இராமாநுஜ நூற்றந்தாதி" சேவிக்கப்பட்டு, இருபத்தி நான்காம்

# திருமலையில் "வெள்ளை சாத்துப்படி உற்சவம்"



**சித்திரை மாதம் திருவாதிரை நட்சத்திரத்தன்று வருடந்தோறும் இராமானுஜரின் திரு அவதார தினம் கொண்டாடப்படுகிறது. இது "பாஷ்யகாரர் உற்சவம்" என்ற பெயரில் திருமலையில் பத்து நாட்கள் வெகு விமரிசையாக நடத்தப்படுகிறது. எப்பொழுதும் காவி அணிந்தபடி இருக்கும் இராமானுஜரின் திருமேனிக்கு இன்றொருநாள் மட்டும் வெள்ளை வேட்டி உடுத்தி அழகு பார்க்கும் அவகாசம் பக்தர்களுக்கு கிடைக்கும். இந்த "வெள்ளை சாத்துப்படி" மிகவும் சிறப்பான ஒரு அலங்காரம். இந்த நாளில் இராமானுஜரின் உற்சவ சிலையை கோயிலுக்கு வெளியே திருவீதிவலமாக எழுந்தருளப்பண்ணி பக்தர்களை அருள்பாலிக்கச் செய்வது வழக்கம். இராமானுஜர் நிறுவிய இந்த ஜீயங்கார் மடத்திற்கு அவரின் திரு அவதார உற்சவத்தை நடத்துவதிலும் மிகப் பெரிய பங்கு உண்டு.**

நாளன்று க்ஷேத்ர அதிபதியான வராகருக்கு சாற்று முறை நடத்தப்படும். இருபத்தி ஐந்தாம் நாள் திருமலை நம்பிகள் செய்த தீர்த்த கைங்கரியத்தை நினைவு கூறும் வகையில் "தண்ணீர் அமுது" உற்சவம் நடைபெறும். இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் ஜீயங்காரின் கண்காணிப்பில் நடக்கும்.



கோயில் கைங்கரியங்கள் மட்டுமே அல்லாமல், திருமலைக்கு வரும் பக்த கோடிகளுக்கு உண்ண உணவு மற்றும் தங்க விடுதி அளிப்பது இந்த ஜீயங்கார் மடத்தின் இன்னொரு முக்கிய பொறுப்பு. இங்கு பெரிய ஜீயங்கார் மடத்திலும், சின்ன ஜீயங்கார் மடத்திலும் நாள் தோறும் பக்தர்களுக்கு அன்னப் பிரசாதம் அளிக்கப் படுகிறது. விடியற்காலையில் தரிசனம் மேற்கொள்ள உள்ள பக்தர்களும் முன்னாள் இரவு இங்கு தங்கலாம். இராமானுஜர் நிலைநாட்டிய ஸ்ரீவைணவ சம்பிரதாயத்தை எள்ளளவும் பிசிறின்றி, விலக்குகள் இன்றி இனிதே நடைமுறைபடுத்துவதில் இந்த ஜீயங்கார் மடம் பல நூற்றாண்டுகளாக செவ்வனே தொண்டாற்றி வருகிறது. எம்பெருமானாரின் சேவையில் எந்நாளும் திளைத்து வருகிறது.





# பெருமாள் பிரசன்னமான பெருமலை

நெய்வாசல் நெடுஞ்செழியன்,
சிதம்பரம், 94422 05862

**திருமலையைப் போன்று மற்றொரு மலையில், அதே நின்ற கோலத்தில் அருள்புரியும் திருமலைவையாவூர் ஸ்ரீபிரசன்ன வேங்கடேசுவர பெருமாளை தரிசித்து மனக்குறையை தீர்த்துக் கொள்கிறார்கள். அந்த விதத்தில் திருப்பதி திருமலையை தரிசிக்க முடியாதவர்களும், பிராப்தம் இருந்தும் திருப்பதி செல்ல வாய்ப்புக் கிடைத்தும் திருப்தியாய் தரிசனம் செய்ய முடியாதவர்களும் தேடிச்சென்று நிதானமாக தரிசிக்கும் திருத்தலமாகத் திகழ்கின்றது திருமலைவையாவூர் திருத்தலம்.**



### தலச்சிறப்பு

திருமலையைப் போன்று மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் அமையப் பெற்ற தலம். பெருமாள் இங்கு மலைமீதிருந்து அருள் பாலிப்பதுடன், திருமலையைப் போல அதே திருநாமத்துடன், அதே அலங்காரத்துடன் அருள்பாலிக்கிறார். தாயார் ஸ்ரீஅலர்மேல்மங்கை தாயார் என்ற அதே திவ்ய நாமத்துடன் அருள் பாலிக்கிறார். பெருமாள் வராஹமூர்த்தி அவதாரம் எடுத்தபோது கருடனுக்கு அதை காணும் பிராப்தம் கிடைக்காமல் போனது. அந்த குறையைத் தீர்க்கும் விதமாக வராஹமூர்த்தி கோலம் கொண்ட பெருமாள் இம்மலையில் அமர்ந்து அருள்பாலிப்பதாகக் கூறப்படுகின்றது.



பெருமாளின் இரு மார்புகளிலும் இரு தேவியரும், திருவாசியில் ஆதிசேஷனும் இருந்து அருள் பாலிக்கின்றனர். இப்படி திருமலையில் அருள்புரியும் அனைவரும் அதே கோலத்துடன், அதே திவ்ய நாமத்துடன் இம்மலையிலும் இருந்து அருள் பாலிப்பதால் பக்தர்கள் இதை தென் திருப்பதி, தென் வைகுண்டகிரி, தென்கருடகிரி, தென்சேஷகிரி, ஆதிவராஹக்ஷேத்திரம், ஸ்ரீராமாநுஜர் இத்தலத்திற்கு வந்து சிறிதுகாலம் தங்கி வழிபட்டதால் ஸ்ரீராமாநுஜயோககிரி என்றும் அழைக்கப்படுகிறது. மூலவர் ஸ்ரீபிரசன்ன வேங்கடேச பெருமாள், தாயார் ஸ்ரீஅலர்மேல் மங்கை, உற்சவர்கள் ஸ்ரீநிவாசர், கள்ளபிரான். தீர்த்தம் வராஹ தீர்த்தம். இது திருவோண நட்சத்திரத்திற்குரிய கோயிலாகக் கொண்டாடப்படுகிறது.

### ஊர் வரலாறு

இராமசேனைக்கும் இராவணாதியர்களுக்கும் நடைபெற்ற யுத்தத்தின்போது ஸ்ரீலக்ஷ்மணர் காயம்பட்டு வீழ்கிறார். பதறிப்போன இராமச் சந்திரபிரபு தம்பிக்கு சிகிச்சை அளிப்பதற்காக, அனுமனை அழைத்து, சஞ்சீவி பர்வதத்திற்குச் சென்று சில பச்சிலைகள் பறித்து வருமாறு பணிக்கிறார். அடுத்த நிமிடமே விஸ்வரூபம்



எடுத்து பறந்து சஞ்சீவி மலையை அடைந்த அனுமன் மலையையே பெயர்த்து எடுத்து கைகளில் ஏந்திய வண்ணம் பறந்து வரும்போது இங்கு வீற்றிருக்கும் எம்பெருமானை வணங்குவதற்காக மலையை கீழே வைக்காமல் ஒரு கரத்திலிருந்து மற்றொரு கரத்திற்கு மாற்றிக் கொள்கிறார். மலையை கீழே வைக்காத காரணத்தால் இவ்வூருக்கு மலைவையாவூர் என்ற பெயர் ஏற்பட்டதாகவும் புராண வரலாறு கூறுகின்றது.

### தலவரலாறு

கருடன் வைகுண்டத்திலிருந்த பஞ்சபூதங்களான மலையை சுவர்ணமுகி ஆற்றங்கரைக்கு கொண்டு சென்றபோது அதிலிருந்து ஒரு சிறு பகுதி உடைந்து பாலியாற்றின் (பாலாறு) கரையில் விழுந்தது. சுவர்ணமுகி ஆற்றின் கரையில் வைக்கப்பட்ட மலைக்கு கருடகிரி என்றும், பாலாற்றங்கரையில் உடைந்து விழுந்த மலையின் சிறு பகுதி தக்ஷிண கருடகிரி என்றும் அழைக்கப்பட்டன. இரண்டு மலைகள் மீதிருந்தும் வராஹப் பெருமான் அருள்பாலித்தார். கருடகிரியே இன்றிருக்கும் திருப்பதி திருமலை. தக்ஷிண கருடகிரி ஒரு கால கட்டம் வரை தென்மலை என்றழைக்கப் பட்டது. திருமலையின் பிரிதி பிம்பமாக இவ்வூர் அமைந்ததால் "திரு"வை சேர்த்து ஊரும் திருமலை வையாவூரானது.





அபராஜித தொண்டைமான் வர்மன் என்னும் மன்னன் தீவிர திருமால் பக்தன். திருப்பதி திருமலையில் ஏராளமான திருப்பணிகளைச் செய்தவன். ஒரு கால கட்டத்தில் அவனது நாட்டில் எதிரிகள் புகுந்து சின்னா பின்னமாக்க, செய்வது அறியாது தவித்தவன் பெருமாளை வேண்ட, தன் பக்தனுக்கு உதவும் விதமாக சங்கு சக்ரத்துடன் தோன்றிய பெருமாள் போர்க்களம் புகுந்து எதிரிகளை பந்தாடி அவனது நாட்டை மீட்டுத் தந்தார். இதனால் மகிழ்ந்த மன்னன் நன்றி தெரிவிக்கும் முகமாக பெருமாளை வழிபட்டான். அப்பொழது கையில் செங்கோலை பிடித்தவாறு ஒரு தேரிலிருந்து (போர்க்களக்காட்சி) அவன் மனதில் பிரசன்னமான பெருமாள் பர்வதத்தின் இப்பகுதியில் எமக்கு ஒரு கோயில் எழுப்புவாயாக. இங்கும் நாமிருந்து பூலோகத்தைக் காக்க திருவுள்ளம் கொண்டுள்ளோம் என்பதாகக் கூற, மன்னனும் இந்த மலைவையாவூர் மலைக்கோயிலை கட்டிமுடித்தான். அபராஜித வர்ம தொண்டைமானால் கட்டப்பட்ட கோயில் தொடர்ந்து பல மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்டுள்ளது. கோயில் ராஜகோபுரத்தை சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் விஜயநகர பேரரசர் ராஜாதோடர்மால் கட்டியதாக கல்வெட்டு செய்திகள் கூறுகின்றன.



### ஆலய அமைப்பு

எங்கு நோக்கினும் பசுமை போர்த்தியது போல காட்சியளிக்கும் மலையின் தோற்றம் மனதிற்கு மகிழ்ச்சியையும் நிறைவையும் அளிக்கிறது. சுமார் 450 படிகளைக் கொண்ட மலையில் ஸ்ரீபிரசன்ன வேங்கடேசுவரர் வீற்றிருக்கின்றார்.



## அமைவிடம்

செங்கல்பட்டிலிருந்து சுமார் 18 கி.மீ. தொலைவிலும், மதுராந்தகத்திலிருந்து சுமார் 20 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ள இவ்வாலயத்திற்கு படாளம் கூட்டுசாலையிலிருந்து வேடந்தாங்கல் செல்லும் சாலையில் 4 கி.மீ. பயணித்தால் சென்றடையலாம். அரசு மற்றும் தனியார் பேருந்துகளும் ஆட்டோக்களும் இயக்கப்படுகின்றன.

### வேண்டுதல் மற்றும் நேர்த்திக்கடன்

ஸ்ரீபிரசன்ன வேங்கடேச பெருமாளை வழிபட்டால் சர்ப்பதோஷம் விலகும். தனி விமானத்துடன் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீசுதர்சனரை வணங்கினால் எதிரிகளின் தொல்லைகளிலிருந்து விடுபடலாம், நினைத்த காரியம் நிறைவேறும். வெற்றிலை பாக்கு வைத்து 48 நாட்கள் ஸ்ரீவராஹப்பெருமானை வழிபட்டு வர திருமண யோகம் கைக்கூடி வரும்.

வராஹ தீர்த்தத்தில் நீராடினால் பிரம்மஹத்தி தோஷம் அகலும் என்பதான நம்பிக்கையில் ஏராளமான பக்தர்கள் வருகைதந்து தங்கள் பிரச்சனைகள் தீர வேண்டிக்கொண்டு நிறைவேறிய பின்னர் திரும்பவும் வந்து பரிகாரம் செய்கின்றனர். வேண்டுவோருக்கு வேண்டியதைத் தரும் வரப்பிரசாதியான இவ்வாலய ஆஞ்சநேயர் முன் வைக்கப்படும் வேண்டுதல்கள் 48 தினங்களில் நடந்தேறுகிறது என்ற நம்பிக்கையில் பக்தர்கள் ஆலயத்திற்கு வந்து தங்கள் வேண்டுதலை ஒரு வெள்ளைத் தாளில் எழுதி அதன்மீது மட்டையுடன் கூடிய தேங்காயை சேர்த்து மஞ்சள் துணியில் முடித்து அனுமனின் பாதத்தில் வைத்து வழிபட்டு பின்னர் அதற்குரிய கொம்பில் கட்டிவிட்டுச் செல்கின்றனர். வேண்டுதல் நிறைவேறிய பின்னர் ஆஞ்சநேயருக்கு வெண்ணெய் காப்பு சாத்தியும் வெற்றிலை மாலை அணிவித்தும் நேர்த்திக் கடன் செலுத்துகின்றனர்.

மலைக்குச் செல்வதற்கு வாகனப் பாதையும் அமைக்கப்பட்டுள்ளது.

படிக்கட்டுகள் வழியே மேலே ஏறிச்சென்றால் முதலில் நம்மை வரவேற்பது மூன்றுநிலை ராஜகோபுரம். அதனருகே நர்த்தன வினாயகர் சன்னதியும், கிழக்கில் கருடாழ்வார் சன்னதியும் அமைந்துள்ளது. வடக்குப் பகுதியில் துவஜஸ் தம்பமும், இதற்கு எதிரில் லக்ஷ்மி வராஹர் கோயில் கொண்டு அருள்பாலிக்கிறார்.

அதனால் திருப்பதி தலத்தைப் போலவே இதையும் ஆதிவராஹ க்ஷேத்திரமாக எண்ணி பக்தர்கள் வழிபடுகின்றனர். ஆதிவராஹரின் அற்புத தரிசனத்தை முடித்த பின்னரே மூலவரை தரிசிக்க வேண்டும். வராஹரின் எதிர்புறத்தில் உள்ள மலையிலிருந்தவாறு பிரசன்ன வேங்கடேஸ்வர பெருமான் அருள்புரிகிறார்.

மூலவராக ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர பெருமான் நின்ற திருமேனியராய், தோளில் சாளக்கிராம மாலையும், கழுத்தில் லக்ஷ்மி ஆரமுமாக அருள்பாலிக்கிறார். குறிப்பாக தசாவதார திருக்கோலக் காட்சியைக் கொண்ட ஆபரணத்தை மாலையாகவும், ஒட்டியாணத்தையும் அணிந்தபடி காட்சித்தரும் அழகே அழகு. இன்னொரு சிறப்பாக கையில் செங்கோலுடன் தரிசனம் தருவதைக் கூறலாம். தாயாரின் திருநாமம் ஸ்ரீஅலர்மேல் மங்கைத் தாயார் என்பதாகும். அழகனுக்கு ஏற்ற அழகியாக அன்னை அருட்கோலம் பூண்டு தனி சன்னதி கொண்டு அனைவருக்கும் அருள்பாலிக்கிறார். அதேப்போன்று தனி சன்னதியில் அமர்ந்த கோலத்திலிருந்து ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் அருளாட்சி நடத்தி அருளாசி வழங்குகிறார். மலையில் இந்த பிரதான மூர்த்திகளைத் தவிர யோகநரசிம்மர், தனி விமானத்துடன் கூடிய சக்கரத்தாழ்வார், கண்ணன், இராமபிரான், மலை அடிவாரத்திலிருக்கும் ஸ்ரீவீர ஆஞ்சநேயரும் அருள்பாலிக்கின்றனர்.

### உற்சவங்களும், விழாக்களும்

பிரதி வியாழன் தோறும் திருமலை வேங்கடவன் போல நேத்திர தரிசனம் தருவது, மாதந்தோறும் திருவோண நட்சத்திர நாளில் நடத்தப்பெறும் சிறப்பு வழிபாடு, தோஷங்கள் நீக்கும் புரட்டாசி வழிபாடு என ஆலயம் அனைத்து நாட்களிலும் களைகட்டுகின்றது. சித்திரை மற்றும் புரட்டாசி என ஆண்டுக்கு இரண்டு பிரம்மோற்சவங்கள் நடத்தப்படுகின்றன. சித்திரை பிரம்மோற்சவத்தில் கள்ளர்பிரானும், புரட்டாசி பிரம்மோற்சவத்தில் ஸ்ரீநிவாசப்பெருமாளும் உலா வருகின்றனர். இங்கும் திருப்பதி பிரம்மோத்ஸவத்தின் போது சென்னையிலிருந்து திருப்பதிக்கு திருக்குடை ஊர்வலம் செல்வது போன்று, இவ்வாலயத்திற்கும் சென்னையிலிருந்து திருக்குடை ஊர்வலம் கொண்டு வரப்படுகிறது.

# திருவேங்கடவனின் திருவிளையாடல்

திரு. ரா. முரளிதரன், கடலூர், 94422 76278

*திரு மலை நனைந்த மழையருவியில்*
*மலர்வனம் சிந்தும்வாசம்*
*பெரு மழை மலர்சிந்தும் சுவைநீரை*
*தேடியருந்தும் இளம்பறவைகள்*
*கரு நிறமலை நீர் முத்துக்களா- சூல்கொண்டு*
*வானவில்லாய் பிறக்கும்*
*வரு மடியவர் ஆயிரம் வினைகள் தீர*
*வைகுண்டம் காண்பாரேயினிதாய்*

திருமலை மாதவன் அணிந்திரும் ஏழுமலை மணியாகும். ஏழுமலை நிறைந்திருக்கும் மரங்கள் மூலிகை பாற்கடலாகும். வானத்து கருமேகங்கள் கண்ணீர் சிந்தி மலையப்பனின் அருளினை நாடும். வனம் நிறைந்திருக்கும் மான் கூட்டங்கள் துள்ளி விளையாடும். மலர் வனம் கசங்கும். தேன் சிந்தும். வண்ணத்துப் பூச்சிகள் கூட்டம் கூட்டமாய் தேடி உண்டு மயங்கி மாதவமிருக்கும்.

ஏழுமலையோடு ஓடும் மலையருவிகள். ஓடும் அருவியோடு மேகங்கள் கொஞ்சும். அருவி சிந்தும் நீர் வேகத்தில் தெறிக்கும் நீர் சாரல்கள் காற்றில் பயணித்து காத்திருக்கும் அரும்புகளை தட்டி எழுப்பும். நீரில் நனைந்த அரும்புகளோடு வெட்கத் தால் சிலிர்த்து மலர்ந்து சிரிக்கும். இதனை எதிர் பாராத வண்ணத்துப் பூச்சிகள் பயத்தில் சிதறி யோடும்.

இயற்கையின் அற்புதங்கள் நிறைந்த ஏழுமலை வனத்தில் அழகிய ஆசிரமத்தில் வசித்து வரும் கிரி மன மெல்லாம் எப்போதும் வேங்கடவன் நினைவோடு அனைத்தையும் துறந்து வாழ்ந்ததால் துறவியா வார். அவருக்கு தெரிந்தது புரிந் தது அறிந்தது எல்லாமே திருவேங்கடவன்தான். திருவேங்கடவனை எந்நேரமும் நினைத்திடவும், எப்போதும் கண்முன்னே திருவேங்கடவன் கோபுரம் தெரியும் வண்ணம் இந்த வனத்தில் வாழ்ந்து வந்தார்.

ஆசிரமம் சுற்றி சிறிய தோட்டம் ஒன்று அமைத் தார். வாழை இவருக்கு உதவியது. இனிக்கும் கரும்பினையும் நட்டு வளர்த்தார். துணைக்கு ஒரு பசுவினை வளர்த்தார்.

அடர்ந்த வனம் என்பதால் ஆட்கள் நடமாட்டம் குறைவு. ஆனாலும் எப்போதாவது யாராவது நடந்து வருவார்கள். அன்று அப்படித்தான் ஒருவர் வாசலில் வந்து நின்று துறவியினை அழைத்தார். துறவி வெளியே வந்து வந்திருப்பது யார் என்று வியப்புடன் பார்த்தார். அழகே உருகெண்டு ஒளி மிகுந்து, பார்ப்பவர்கள் பரவசமடையும் உருவில் ஒருவர் நின்றிருந்தார்.

துறவி அவரைப்பார்த்து தாங்கள் யார் ஸ்வாமி எனக் கேட்டார். ஐயா, நான் அதோ வெகு தொலை யில் திருவேங்கடவன் கோபுரம் தெரிகிறதல்லவா. அங்கிருந்து வருகிறேன். இந்த வனத்தில் மூலிகை





பறிப்பதற்காக அவ்வப்போது வருவேன். ஆள் நடமாட்டம் குறைவான இந்த வனத்தில் தங்கியிருக்கும் தங்களை பார்க்க வேண்டும் என்று நீண்ட நாட்களாக எண்ணினேன். இன்று தான் ஈடேறியது. வேங்கடவன் ஆலயம் இருக்கும் இடத்திலிருந்து வருவதை எண்ணி மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன் வாருங்கள். இப்படி வந்து அமருங்கள். தாகத்திற்கு நீர் தருகிறேன் அருந்துங்கள். களைப்பு போன பின் செல்லலாம் என்றார் துறவி. ஸ்வாமியே தங்கள் பெயர் என்ன எனக் கேட்டார் துறவி. என்னை பாலாஜி என்றழைப்பார்கள்.அந்த ஆலயத்தின் அருகிலேதான் இருக்கிறேன். ஆனால் வேங்கடவனை நான் பார்த்ததும் இல்லை. அவர் ஒன்றும் எனக்கு செய்ததும் இல்லையே?

இல்லை ஸ்வாமி அப்படி கூறாதீர்கள். திருவேங்கடன் அருட்கடலாவார். அதோ பாருங்கள் கரும்பு நட்டு வைத்திருக்கிறேன் எதற்கு தெரியுமா? கரும்பினை நன்கு உற்று நோக்குங்கள். நீண்ட நெடிய கருத்த நிறம் கொண்டு உச்சியில் பச்சையாய் கிரீடம் வைத்தாற்போல் என்ன அழகான தோற்றம். அதோ அந்த மலையினை பாருங்கள் அழகான கரு நிறத்தில் நீண்ட கரும்பு போன்ற மலையில் தலையில் பச்சை பசேல் என்ற பசுமை மரங்கள் இந்த கரும்பின் தலைபாகத்தினை ஒத்திருக்கிறதா? ஆஹா துறவியே அற்புதம்... ஆனால் கரும்பிற்கும் மலைக்கும் என்ன தொடர்பிருக்கிறது.

*முற்றிய கரும்பும் சாறாகும் பின் உருமாறி*
*வற்றிய நீரும் வெண்மணியாகி இனித்திடும்*
*பற்றிய அக்னியால் கல்லாய் சுவைகூடுமே*
*ஒற்றிய மந்திரங்களை விஞ்சி*
*சுவைதருமருளாளனே*

ஸ்வாமி, கரும்பானது வளர்ந்து நாவிற்கினிய சாறு பிழிந்து அதனிலிருந்து இனிக்கின்ற சர்க்கரை உருவாகி அது கற்கண்டாய் மாறுகிறது. ஒவ்வொரு நிலையிலும் அதன் உரு மாறினாலும் அதன் சுவை மாறாது நம்மை பரவசப்படுத்துகிறது. எனது கண்களுக்கு திருவேங்கட மலையெல்லாம் கரும்பாய் வளர்ந்து எங்கும் நிறைந்து கரும்புகள் ஒன்றோடு ஒன்று உரசி பக்தி வெள்ளத்தில் கரும்பஞ்சாறு அருவியென வழிந்து பின் ஆறாக மாறி வேங்கடம் முழுவதும் ஓடி, பக்தர்களை பார்க்கும்போது இனிக்கும் சர்க்கைரை யாகிறது. கோவிந்தா! கோவிந்தா! என முழக்கம் இடுவதால் அந்த சர்க்கரையும் கற்கண்டாக மாறி இனிக்கிறது.ஸ்ரீநிவாசனும் வரும் பக்தர்களுக்கு கற்கண்டாய் இனிக்கிறார். அவருடைய கருணைக்கு எல்லைகள் இல்லை. நாடிவரும் அடியவர்கள் நம்பிக்கை வீண் போகாது. அப்படித்தான் நானும் கற்கண்டினை நாடி வந்துள்ளேன். ஆஹா அற்புதம் துறவியாரே தங்களுக்கு கிடைக்கும் கற்கண்டின் சுவையினை எனக்கும் தருவீர்களா. ஆகட்டும் ஸ்வாமி.வந்தது திருவேங்கடவன் என்று தெரியாமலே உரையாடலை முடித்துக் கொண்டார் துறவி. திருவேங்கடவன் நம்பினவர்களை என்றும் கை விடமாட்டார் என்று உணரவேண்டும்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ன் | ஜ | ரா | ச | கா | 1 ஆ | தி | வ | ரா | க | ர் | |
| 2 ஸ்ரீ | வா | ரி | சே | வை | ன | | 3 ஸ | | 4 தொ | வா | 5 அ |
| ம | வி | | ம் | ம் | ந் | | ப் | கா | ண் | ழ் | ல |
| லை | தே | | ச | த | த | | த | ளி | டை | ஆ | ர் |
| ய | ணி | 6 ச | னா | சா | நி | | கி | மா | மா | ர | மே |
| ப் | ர | க் | வி | ர் | லை | 7 க | ரி | ள | ன் | க | ல் |
| ப | 8 தா | க | ப | யி | ய | ரு | வா | கு | | சே | ம |
| 9 சு | ப் | ர | 10 பா | 11 த | ம் | டோ | ச | 12 வ | | ல | ங் |
| வா | | | லா | | | த் | ன் | ர | பே | 13 கு | கா |
| மி | | | ஜி | | | ஸ | சி | டா | ட் | ர | 14 பு |
| | ம் | ண | ஹ | ரோ | ஜா | வ | 15 து | | | | ர |
| ன் | ம | ம் | ர | 16 பி | ர | ம் | மோ | த் | ஸ | வ | ம் |



# செப்டம்பர் 2022
# ராசிப் பலன்கள்

- டாக்டர் எம்.வி. நரநாராயணன், சேலம், 94422 86213.






வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. பூர்வ சொத்துக்களில் இருந்த பிரச்சனைகள் தீரும். சுபச்செலவுகள் நடக்கும். தொழில் துறையில் அலைச்சல் அதிகமாகும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு. தொழில் விஸ்தரிப்பு செய்யலாம். ஆரோக்கியம் மேம்படும். செல்வம் சேரும்.




கணவன்-மனைவிக்குள் இருந்த பிரச்சனைகள் தீரும். யாத்திரை செல்வீர்கள். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிடைக்கும். குழந்தைகளினால் சந்தோஷம் உண்டு. மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். தந்தையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் விருத்தியும் தன லாபமும் உண்டு. குழந்தைகளுக்கு யோகம் உண்டாகும்.




ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை தேவை. எல்லா காரியங்களிலும் 2வது முயற்சியில் வெற்றி உண்டு. உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டு. குழந்தைகளின் ஆரோக்கியத்திலும் அக்கறை தேவை. மாணவர்கள் நன்கு படித்தால் மதிப்பெண்கள் பெற முடியும். தொழில் துறையில் அலைச்சல் ஏற்படும். நண்பர்கள், உறவினர்கள் உதவி கிடைக்கும். அக்கறையுடன் செயல்பட வேண்டும்.




குடும்பத்தில் பிரச்சனைகள் தீரும். தாய்-தந்தையரால் நன்மைகள் உண்டு. தொழில் துறையில் அலைச்சலுக்கேற்ற வருமானம் உண்டு. கணவன்-மனைவிக்குள் சலசலப்புகள் ஏற்பட்டு சரியாகும். சகோதரர்களால் தனலாபம் உண்டு. தெய்வத்தலங்களுக்கு யாத்திரை செய்வீர். வெளிநாடு செல்லும் யோகம் உண்டு.




குடும்பத்தில் இருந்த வீண் செலவினங்கள் குறையும். தாராள பணப்புழக்கம் ஏற்படும். இளைய சகோதரனின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. எதிரிகளை வெல்லும் ஆற்றல் பெறுவீர்கள். போட்டியில் வெற்றி கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். தந்தையின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் துறையில் புதிய முயற்சிக்கு வெற்றி கிடைக்கும். ஆரோக்கியத்தில் எச்சரிக்கை தேவை.




புத்திசாலித்தனத்துடன் செயல்பட்டு காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். குழந்தைகள், தந்தை ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மனைவியால் தனலாபம் உண்டு. மனைவி நல்ல ஆலோசனைகளை வழங்குவார். செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் கிடைக்கும். தொழில் துறையில் புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். நினைத்ததை சாதிப்பீர்கள்.




செலவினங்களுக்கு ஏற்ற வருமானம் உண்டு. தாய், மனைவியின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. நண்பர்கள் உறவினர்களுடன் பிரச்சனைகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகும். குடும்பத்தில் மருத்துவச் செலவுகள் உண்டு. தந்தை மூலம் தனலாபம் உண்டு. கல்விக்காக செலவுகள் அதிகமாகும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.




கணவன்-மனைவிக்குள் நல்லுறவுகள் உண்டு. மனைவி பெயரில் தொழில் செய்பவர்கள் விருத்தி அடைவார்கள். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவார்கள். இளைய சகோதரனுக்கு உடல் உபாதைகள் ஏற்படும். தொழில் துறையில் புதிய முயற்சிகள் வெற்றியைக் கொடுக்கும். யாத்திரை செய்வீர்கள். நல்ல யோகம் உண்டாகும்.




தொழில் துறையில் புதிய முயற்சிகள் வெற்றியைக் கொடுக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தாய்- தந்தையரின் ஆரோக்கியம் மேம்படும். தனக்குக் கீழ் பணிபுரியும் பணியாளர்களால் நன்மையுண்டு. நண்பர்கள், உறவினர்கள் உதவி கிடைக்கும். பழைய பாக்கிகள் வசூலாகும். தாராள பணப்புழக்கம் உண்டு. ஆரோக்கியத்தில் இருந்த குறைபாடுகள் விலகும்.




பிடிவாதமாகக் காரியங்களைச் செய்து வெற்றி பெறுவீர்கள். தொழில் துறையில் நல்ல வளர்ச்சி உண்டு. தைரியமாகச் செயல்படுவீர்கள். பூமி, வாகனம் வாங்கும் யோகம் உண்டு. தந்தையின் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வேலைப் பளு அதிகமாகும். மாதத்தின் முன் பகுதியை விட பின் பகுதியில் நல்ல வருமானம் உண்டு.




செலவுகள் அதிகமானாலும் அதற்குறிய வருமானத்தைப் பெறுவீர்கள். தாய்-தந்தையரின் ஆரோக்கியத்தில் சிறு பின்னடைவு ஏற்படும். சகோதர வகையில் தனலாபம் உண்டு. தூக்கம் குறையும். மாணவர்கள் நன்கு படித்தால் நல்ல மதிப்பெண்களைப் பெற முடியும். தெய்வ காரியங்களில் ஈடுபட்டு நல்ல பலனைப் பெறுவீர்கள். செலவு உண்டாகும்.





தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் புதிய முயற்சிகளைச் செய்யலாம். மனைவியின் ஆலோசனை உதவும். குடும்பத்தில் செலவினங்கள் அதிகமானலும் அதற்குரிய வருமானம் கிடைக்கும். தெய்வத்தலங்களுக்கு யாத்திரை செய்து நல்ல தரிசனம் கிடைக்கப்பெறுவீர்கள். சகோதரர்களின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. நினைத்ததை சாதிப்பீர்கள்.


# தூய பக்திக்கான பலன்

**சித்திரக் கதை**

கதை மூலம் : திரு. ஸ்ரீநிவாச தீக்ஷிதுலு
சித்திரம் : திரு. துவாரகநாத்

துவாரகாவிற்கு வெகுத்தொலைவில் உள்ள ஒரு கிராமத்தில் குசேலர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் ஸ்ரீகிருஷ்ணரின் பால்ய நண்பனாவார். குசேலர் தன் மனைவி மக்களுடன் சிலகாலம் வறுமையில் வாடினார்.




அவல் மூட்டையை மனைவி கட்டித் தர, குசேலரும் அவ்வவல் மூட்டையுடன் துவாரகாவிற்கு பயணமானார். ஸ்ரீகிருஷ்ணரின் அரண்மனைக்குச் சென்று வாயில் காப்பாளனிடம்..
ஐயா! ஸ்ரீகிருஷ்ணரைக் காண வந்துள்ளேன். நான் அவருடைய பால்ய நண்பன்.
உள்ளே சென்று கூறிவிட்டு வருகிறேன். இங்கேயே காத்திருங்கள்!
பணியாளன் குசேலரை குறித்து ஸ்ரீகிருஷ்ணரிடம் கூற, பெயரைக் கேட்டவுடனே ஸ்ரீகிருஷ்ணரும் ருக்மிணியுடன் வாசல்முன்பு வந்து கட்டித் தழுவி உள்ளே அழைத்துச் சென்றார்.
குசேலா! எனக்காக நீ என்ன கொண்டு வந்தாய்?
கிருஷ்ணா! பெரியதாக ஒன்றும் கொண்டு வரவில்லை.
குசேலர் தான் கொண்டு வந்த மூட்டையிலிருந்து ஒரு கைப்பிடி அளவு அவலை ஸ்ரீகிருஷ்ணருக்குக் கொடுக்க, கிருஷ்ணரும் உண்டார்.
ஆஹா! எவ்வளவு சுவையாக உள்ளது இந்த அவல்.
இரண்டாவது கைப்பிடியளவு எடுக்கும்போது ருக்மிணி தேவி தடுத்து
தேவாதி தேவா! அனந்தகோடி பொருட்களை இவருக்கு அளிப்பதற்கு நீங்கள் உட்கொண்ட அந்த அவல் போதும். மேலும் உண்ண வேண்டாம்.
அன்றைய தினம் விருந்து உட்கொண்ட குசேலர் ஸ்ரீகிருஷ்ணரிடம்
கிருஷ்ணா! நான் தன்யனானேன்.
ஸ்ரீஹரியான ஸ்ரீகிருஷ்ணர் குசேலரின் பக்திக்கு மெச்சி அனந்த கோடி பொருட்களை குசேலருக்கு அருளினார்.
அன்று குசேலருக்கு அருள் புரிந்த ஸ்ரீகிருஷ்ணரே இன்று இந்த கலியுகத்தில் திருவேங்கட மலையில் வேங்கட கிருஷ்ணராக நின்று தன்னை நாடி வரும் பக்தர்களுக்கு அருள் புரிந்து வருகின்றார்.
முற்றும்.

பகவத் இராமாநுஜரின் கட்டளையின்படி திருமலையில் புஷ்ப கைங்கர்யம் செய்ய யாரும் இல்லாததால் தன் நிறைமாத கர்ப்பிணியான மனைவியுடன் காடுகள் சூழ்ந்த திருமலைக்கு நடந்தே வந்தவர்தான் அனந்தாழ்வான். புஷ்ப கைங்கர்யம் செய்வதற்கு மிகவும் இன்றிமையாத ஒன்று தண்ணீர். அதற்காக தன் கைகளாலேயே ஒரு குளத்தை வெட்டி, அதற்கு “இராமாநுஜர் ஏரி” எனப் பெயரிட்டு, சுற்றிலும் அழகான நந்தவனம் அமைத்து, அதில் மலரும் புஷ்பங்களைக் கொண்டு மாலைக்கட்டி திருவேங்கடமுடையானுக்கு சமர்ப்பித்துக் கொண்டிருந்தார்.

அனந்தாழ்வான் மற்றும் நிறைமாத கர்ப்பிணியான அவருடைய மனைவி இருவரும் தமக்கு வரும் இடையூறுகளைத் தாண்டி குளத்தை வெட்டும் சமயத்தில் அனந்தாழ்வானின் பக்தியை அறிய விரும்பிய திருவேங்கடமுடையான் சிறுவன் வடிவில் வந்து, தான் அந்த தம்பதியருக்கு உதவுவதற்காக வந்ததாகக் கூறினார். அதனை ஏற்க மறுத்த அனந்தாழ்வான் தனக்கு எவ்விதமான உதவியும் தேவையில்லை என்று கூறி அனுப்பி விட்டார். அவருடைய மனைவியைப் பார்த்து தாங்கள் இவ்விதமாக கஷ்டப்பட வேண்டாம் என்று கூறி



# நம் கடமையே நமக்கு கற்கண்டு!

– திருமதி எஸ். வைஷ்ணவி, திருப்பதி.




அந்த மண் கூடையைத் தானே சுமந்தார். அதனைக் கண்டு அனந்தாழ்வான் மிகுந்த கோபம் கொண்டு தன் கையில் இருந்த கடப்பாறையுடன் ஸ்வாமி வடிவில் வந்த சிறுவனை துரத்தினார். ஒரு நிலையில் அந்த கடப்பாறையைத் தூக்கி எறிய, அந்த கடப்பாறை ஸ்வாமி வடிவில் இருந்த சிறுவனின் மோவாயில் பட்டது. இரத்தம் வழிந்தது. ஸ்வாமி வடிவில் வந்த சிறுவன் மறைந்தான்.

இதே சமயத்தில் திருக்கோயிலிலிருந்து வந்த அர்ச்சகர்கள் ஸ்வாமியின் மோவாயில் இருந்து இரத்தம் வழிகிறது. என்ன செய்தாலும் நிற்க வில்லை எனக் கூறினர். அதையறிந்து கருவறையுள் நுழைந்த அனந்தாழ்வான் அங்கே இருந்த பச்சை கற்பூரத் தினை எடுத்து மோவாயில் தடவ, வழிந்த இரத்தம் நின்றது. அப்பொழுதுதான் ஸ்வாமியே சிறுவன் வடிவில் வந்திருந்தார் என அனந்தாழ்வாருக்குப் புரிந்தது. ஸ்வாமியின் லீலையை எண்ணி வியந்து வணங்கினார்.

மற்றொரு சமயம் திருவேங்கடமுடையான் ஸ்ரீதேவித் தாயாரோடு ஒரு இளம்தம்பதிகள் போன்று இரவு வேளையில் அனந்தாழ்வான் அமைத்த அந்த அழகிய பூந்தோட்டத்தில் உலாவி, அங்கிருக்கும் பூக்களை பறித்து ஸ்வாமியே தாயாருக்குச் சூட்டி மகிழ்ந்தார். மறுநாள் காலையில் பூக்களைப் பறிக்க வந்த அனந்தாழ்வான் பூக்கள் எல்லாம் கீழே விழுந்துக் கிடந்ததைக் கண்டு கோபமுற்று துக்கத்தில் ஆழ்ந்தார்.

இவ்வாறு இரண்டு மூன்று நாட்கள் நடந்தது. ஒருநாள் இரவு நேரத்தில் அனந்தாழ்வான் ஒரு மரத்தின் பின்னால் மறைந்து கொண்டு நந்த வனத்தை நாசம் செய்வது யார் என்று பார்த்தார்.

வழக்கம்போல நள்ளிரவில் ஸ்வாமியும் தேவி யும் இளம் தம்பதிகளாக வந்து பூக்களைப் பறிக்க முற்பட்ட போது அனந்தாழ்வான் அவர்கள் இருவரை யும் தடுத்து துரத்தினார். ஸ்வாமி தப்பித்து வெளியே ஓட, தாயார் மட்டும் அவரிடம் அகப்பட்டுக் கொண்டாள். அனந்தாழ்வான், தாயாரைப் பிடித்து அங்கிருந்த சம்பக மரத்தில் கொடிகளின் உதவியால் கட்டிப் போட்டார். தாயாரோ தன்னை விட்டு விட வேண்டினாள். உன்னை பிடித்து வைத்துக் கொண்டால் தானே உன் புருஷன் உன்னைத் தேடிக் கொண்டு வருவான் என்றார் அனந்தாழ்வான்.





சாக்ஷாத் திருவேங்கடமுடையானால் “தாத்தா” என்று அழைக்கப்பட்ட திருமலை நம்பி திருவேங்கடவனின் தினசரி தீர்த்த கைங்கர்யத்தை மிகவும் பக்தியுடன் செய்து வந்தார்.வேங்கடவன் வேடுவச் சிறுவன் வடிவில் வந்து தனது பக்தரின் சிரமத்தைத் தீர்க்க, ஆகாச கங்கை என்னும் தீர்த்தத்தை உருவாக்கி, ஸ்வாமிக்கு இங்கிருந்து தினமும் தீர்த்த கைங்கர்யம் செய்தால்



## .....தண்ணீரமுதோத்ஸவம்.....

போதும் எனக் கூறினார். இன்றும் திருமலை ஆலயத்தில் ஆகாச கங்கையிலிருந்தே ஸ்வாமிக்கு தீர்த்தக் கைங்கர்யம் நடைபெற்று வருகிறது. ஆண்டுதோறும் அத்யயனோத்ஸவத்தின் இறுதி நாளன்று ஸ்ரீசைலபூர்ணரின் நினைவாக ஆகாச கங்கை உத்ஸவம் (தண்ணீரமுதோத்ஸவம்) நடைபெறுகிறது.

அதன்படியே ஸ்வாமியும் புருஷன் உருவில் வந்து, தன் மனைவியை விடும்படி கேட்டார். அங்கு வந்த அந்த புருஷனிடம் அனந்தாழ்வான் அந்த தோட்டத்தைப் பற்றிக் கூறினார். இத்தோட்டம் தனது ஆசார்யரான இராமாநுஜரின் கட்டளைப்படி திருவேங்கடவனுக்குத் தேவையான மலர்களுக்காக ஏற்படுத்தியது எனக் கூறினார். திருவேங்கடவன் அலங்காரப் பிரியன். புஷ்ப அலங்காரம் அவருக்கு மிகவும் பிரியமானது என்று கூறினார். அங்கே புருஷன் வடிவில் நின்றிருந்த வேங்கடமுடையான் அனந்தாழ்வானுக்கு காட்சியளித்தார். அப்பொழுது ஸ்வாமியின் திவ்ய தரிசனத்தில் ஸ்வாமியின் திருமார்பில் ஸ்ரீவத்ஸ கௌஸ்துப தாரணனிடம் “திருமார்பு நாச்சியார்” இல்லையே எனப் பதறினார்.

திரும்பிப் பார்த்து தான் மரத்தில் கட்டியிருந்த அந்தப் பெண்ணே “ஸ்ரீதேவி தாயார்” என்பதை உணர்ந்து எம்பெருமானின் திருவடிகளில் வீழ்ந்தார், வணங்கினார் அனந்தாழ்வான். ஸ்வாமியும், உம்முடைய பக்தியை உலகிற்கு உணர்த்தவே நானும் தாயாரும் இவ்வாறு செய்தோம் எனக் கூறினார். தாங்களே சகல மரியாதைகளுடன் தேவியை சன்னதிக்கு அழைத்து வாருங்கள் என்று கூறி மறைந்தார்.

தனது ஆசார்யர் தனக்களித்த பாக்யமாகக் கருதி, ஸ்ரீதேவி தாயாரை தன் மகளாக, ஒரு அழகான புஷ்பக் கூடையில் அமர்த்தி, திருக்கோயிலுக்குச் சென்று ஸ்வாமியிடம் ஒப்படைத்தார். வருடாவருடம் பிரம்மோத்ஸவம் நிறைவு பெற்ற மறுநாள் வழக்கமாக கோயிலைச் சுற்றி பிரதக்ஷிணமாக வீதி உலா வரும் திருமலையப்ப ஸ்வாமி அன்று ஒருநாள் மட்டும் அப்பிரதக்ஷிணமாக கோயிலைச் சுற்றிக் கொண்டு அனந்தாழ்வான் தோட்டத்திற்கு எழுந்தருளுவது சிறப்பு. அங்கு வந்து மரியாதை ஏற்றுக்கொண்டு அதன் பின் திருக்கோயிலை அடைவார்.


இந்நிகழ்ச்சியிலிருந்து என்ன நீதி அறிய வேண்டுமென்றால் தனக்கு கொடுக்கப்பட்ட பணியை எவ்வளவு தடை வந்தாலும் தானே முடிக்க வேண்டும். வேறொருவருக்கு அளித்து அந்த பணியை முடிக்கக் கூடாது. அதே விதமாக ஸ்வாமி மீதும், ஆசார்யரின் மீதும் பக்தி வைத்து நம் வேலையை செய்தல் வேண்டும்.

பல்சுவை பகுதி

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...

பக்கத்தில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...



### பொருத்துக...

1. இராமர் - அ. மோகிணி வாகனம்
2. கூர்மர் - ஆ. குதிரை வாகனம்
3. நரசிம்மர் - இ. ஹம்ஸ வாகனம்
4. சரஸ்வதி - ஈ. ஹனுமத் வாகனம்
5. கல்கி - உ. சிம்ம வாகனம்

1.ஈ, 2.அ, 3.உ, 4.இ, 5.ஆ.



### பாசுரம் அறிவோம்...


*"எழுவார் விடைகொள்வார் ஈன்துழாயானை*
*வழுவாவகை நினைந்து வைகல் - தொழுவார்*
*வினைச்சுடரை நந்துவிக்கும் வேங்கடமே வானோர்*
*மனச்சுடரைத் தூண்டும்மலை.*

- பொய்கையாழ்வார்

### வார்த்தைகளை சரியாக அணிவகுத்து வாக்கியம் அமைக்கவும்...

வணங்கி பெறுவோம் திருவேங்கடத்திற்குச் மகிழும் சிந்துபூ சென்று வளம்

சிந்துபூ மகிழும் திருவேங்கடத்திற்குச் சென்று வணங்கி வளம் பெறுவோம்.



### பாதையைக் கண்டுபிடி

ஸ்ரீமஹாவிஷ்ணுவின் பக்தனான கருடன் இந்த கலியுகத்தில் திருவேங்கடவனுக்கு அதி முக்கிய வாகனமாவார். அத்தகைய கருடனுக்கு திருவேங்கடமுடையானை சென்று அடைய வழிக்காட்டுங்கள்.

### விடுகதை பகுதி...

1. கழற்றிய சட்டையை மறுபடியும் போட மாட்டான் அவன் யார்?
2. அரசன் இல்லாத கோட்டைக்கு இரண்டு காவல்காரர்கள்?
3. நடைக்கு உவமை. நளனுக்கு தூதுவன். அது எது ?

1. சேஷன்(பாம்பு), 2.சூரியன், சந்திரன் 3.அன்னப்பறவை

# வி னா டி வி னா

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஸப்தகிரி போட்டி எண்-2

**ஸப்தகிரி இதழினைப் படியுங்கள்! வினாடிவினாவில் பங்கு பெறுங்கள்!!**

1. இராமாநுஜரின் கட்டளைப்படி திருமலையப்பனுக்கு புஷ்பகைங்கர்யம் செய்தவர்................................
2. திருமலையில் ஜீயர்கள் அமைப்பினை நிறுவியவர்..................................................................................
3. திருவையாவூர் தலத்தில் அருள் பாலிக்கும் எம்பெருமான்.........................................................................
4. காளிதாசன் இயற்றிய தூது இலக்கியம்.......................................................................................................
5. வித்தகன் வேங்கட வாணன் என்று பாசுரமிட்டவர்.....................................................................................
6. திருவேங்கடவனின் திருப்பாதங்களை பிரம்மா பூஜித்த திருப்பாதங்கள் என்று கூறியவர் ............................
7. திருமலையில் நடை சாற்றும் முன் நடைபெறும் சேவை...........................................................................
8. திருமலையில் பெரிய ஜீயர் மடம் நிறுவப்பட்ட ஆண்டு................................................................................
9. திருமலையில் தாயாரை அனந்தாழ்வான் கட்டி வைத்த மரத்தின் பெயர்.......................................................
10. திருமலையில் பிரம்மோத்ஸவத்தின் போது சக்கரஸ்நானம் நடைபெறும் திருநட்சத்திரம்...............................
11. நாலாயிர திவ்யப் பிரபந்தத்தில் எம்பெருமானிடம் மேகங்களை தூதனுப்பியவர்............................................
12. ஜீவாத்மா, பரமாத்மா இருவரையும் உழவர்களாக உருவகித்துக் கூறியவர்....................................................
13. "செம்பவள வாயான்" என திருவேங்கடமுடையானைக் கூறியவர்...................................................................
14. திருப்பதியில் ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமியை பிரதிஷ்டை செய்தவர்.............................................................
15. திருவேங்கட மாமலை ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே என்று பாடியவர்.................................................



### போட்டிக்கான நிபந்தனைகள்

- போட்டியில் பங்கு பெறும் சிறார்கள் 10 முதல் 15 வயதிற்குட் பட்டவராகவும், இந்துக்களாகவும், இந்திய குடிமக்களாகவும் இருத்தல் வேண்டும்.
- வினாடிவினாக்களுக்கான பதில்களை இந்த பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்ட கட்டத்தில் எழுதி "The Chief Editor, Sapthagiri Office, T.T.D. Press Compound, K.T. Road, Tirupati-517 507" என்ற முகவரிக்கு அனுப்பவும். நகல்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
- இப்போட்டியில் அனைத்து விடைகளும் சரியாக எழுதும் சிறார்கள் மூவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படுவர். மூன்று வெற்றியாளர்களின் பெயர்கள் அடுத்த மாத ஸப்தகிரி இதழில் வெளியிடப்படும்.
- இப்போட்டியை குறித்து எவ்வித தகவல்களும் தொலைபேசி வாயிலாக தெரிவிக்கப்படமாட்டாது.
- தி.தி.தே. பிரதான ஆசிரியர் அலுவலக ஊழியர்களின் சிறார்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள அனுமதி இல்லை.
- போட்டியில் பங்குபெறுவோர் சந்தாதாரராக இருத்தல் வேண்டும். சந்தா எண், பெயர், முழு முகவரி & தொலைபேசி எண் ஆகியவற்றை சரியாக எழுதி அனுப்புதல் வேண்டும்.
- விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி 25.09.2022.


**விடையை எழுதுங்கள். திருவேங்கடவன் அருளைப் பெற்றிடுங்கள்**

| |
|---|
| ஸப்தகிரி சந்தா எண் |
| போட்டியாளர் பெயர் |
| ஸப்தகிரி சந்தாதரருடன் போட்டியாளரின் உறவுமுறை |
| போட்டியாளரின் வயது |
| போட்டியாளர் முழு முகவரி |
| தொலைபேசி எண் |


# இதில் பொருந்தாதது எது?



(திருமலை) குறிப்பு : வாகனங்கள், ஏழுமலை, ஸ்ரீநிவாச கல்யாணம், பக்தர்கள் இவற்றிற்கு தொடர்பு இல்லாதவற்றை கட்டத்தில் எழுதவும்.



இரண்டு சித்திரங்களுக்கு இடையே உள்ள ஏழு வித்தியாசங்களை கண்டு பிடியுங்கள்



1) மேகங்கள்
2) 8வது நபரின் தம்பூரா
3) 6வது நபரின் மேலாடை
4) 5வது நபரின் கையேடு
5) 1வது நபரின் கையில் தாளம்
6) மலைகள்
7) கையில் இருந்து விழும் பூக்கள்

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : _________________
(பெரிய எழுத்துக்களில்) _________________
_________________
_________________

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ.240/- ☐ ரூ.2,400/-(12 வருடங்கள்)

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :
பணவிடை (எம்.ஓ./ஐ.எம்.ஓ.)
ரசீது எண் : தேதி:
வங்கி கேட்பு வரைவோலை/காசோலை
டி.டி./காசோலை எண். : தேதி:
இடம் :
நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி
தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

### தி.தி.தே. கால்சென்டர்

உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும்
பணிபுரியும் எப்பொழுது
வேண்டுமானாலும்
நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி எண்கள் :
**0877-
2233333
2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.240/- ஆயுள்சந்தா ரூ.2,400/- (12 வருடங்கள்) காசோலை, இ.எம்.ஓ., டி.டி. -யை பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூப்பனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விவரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

Printed by Sri P. Ramaraju, M.A., and Published by Dr. K. Radha Ramana, M.A., M.Phil., Phd., on behalf of Tirumala Tirupati Devasthanams and Printed and Publised at Tirumala Tirupati Devasthanams Press, K.T. Road,Tirupati 517 507. Editor : Dr.V.G. Chokkalingam, M.A., Ph.D.



17–07–2022 அன்று ஆனிவர ஆஸ்தானத்தை முன்னிட்டு திருவேங்கடமுடையானுக்கு சமர்ப்பிக்க பட்டு வஸ்திரங்களை சுமந்துச் செல்லும் ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் ஸ்வாமிகள். இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்ற ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிறிய ஜீயர் ஸ்வாமிகள் மற்றும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள்



05–08–2022 அன்று திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயாருக்கு நடைபெற்ற ஸ்ரீவரலக்ஷ்மி விரத பூஜையின் போது...



01–08–2022 அன்று திருமலையில் அகண்ட ஹரி நாம சங்கீர்த்தனை நிகழ்ச்சியினை இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்த தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு.ஏ.வி. தர்மாரெட்டி ஐ.டி.இ.எஸ். அவர்கள்

SAPTHAGIRI (TAMIL) SPIRITUAL ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams Printing on 25-08-2022 & posting at Tirupati RMS Regd. with the Registrar of Newspapers for India under RNI No.APTAM/ 2021/80590. Postal Regd.No.TRP/157/ 2021-2023 "LICENCED TO POST WITHOUT PREPAYMENT No.PMGK/RNP/WPP-04(5)/2021-2023" Posting on 20th of Every month.



27-09-2022, செவ்வாய்க்கிழமை
இரவு : பெரிய சேஷ வாகனம்